Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 090 | புதன்கிழமை | மாசி 12 ஆம் நாள் 24 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## சாவகச்சேரியில் விபத்து; இளைஞன் பரிதாபச்சாவு

யாழ்ப்பாணம், பெப். 24
சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். சாவ 19

# வடக்கில் நேற்று 42 பேருக்கு தொற்று

- வடக்கில் 1,000 தாண்டியது தொற்று எண்ணிக்கை
- அண்மைய நாள்களில் பரவல் தீவிரம்
- சமூகத்தில் பலர் கண்டுபிடிப்பு
- தொற்றுமூலம் தெரியாததால் அச்சம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 24

வடக்கு மாகாணத்தில் 42 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 17 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 25 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் இதுவரை தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 4 ஆக அதிகரித்துள்ளது. 19

## சாவ. மருத்துமனையில் நோயாளிக்குத் தொற்று

### பலருக்குச் சிக்கல்

யாழ்ப்பாணம், பெப்.24
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நோயாளி ஒருவருக்கு கொரோனாத் 19

## மாணவர்கள் மூன்று பேருக்கு பருத்தித்துறையில் தொற்று!

யாழ்ப்பாணம், பெப்.24
பருத்தித்துறையில் நேற்று இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் மூவர் பாடசாலை மாணவர்களாவர். இவர்கள் கடந்த 16ஆம் திகதிவரை பாடசாலைக்குச் சமூகமளித்துள்ளனர். பருத்தித்துறையைச் சேர்ந்த ஆசிரியை ஒருவருக்குக் கடந்த 21ஆம் திகதி கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. வடமராட்சியில் உள்ள மகளிர் பாடசாலை 19

## யாழ். போதனாவில் மூவருக்குத் தொற்று!

### புதிய கொத்தணி அபாயம்

யாழ்ப்பாணம், பெப்.24
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தாதியர் இருவருக்கும், நோயாளி ஒருவருக்குமே தொற்று உறுதி செய்யப்பட் 19

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி




## சிவாஜிக்கு சுகவீனம்

யாழ்ப்பாணம், பெப். 24
தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தனது வீட்டிலிருந்த சிவாஜிலிங்கத்துக்கு திடீரென சுகவீனம் ஏற்பட்ட நிலையில், அவர் நோயாளர் காவு 19

## தேவாலய கூட்டத்துக்கு சென்றவருக்கு தொற்று

யாழ்ப்பாணம், பெப்.24
மிருசுவிலில் ஒருவருக்கு நேற்றுத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. மிருசுவில் பகுதியில் ஏற்கனவே தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள வங்கி உத்தியோகத்தரின் குடும்பத்தினருடன் 19

## பிரபாகரன் படத்தால் இருவர் நேற்று கைது!

யாழ்ப்பாணம், பெப்.24
விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் படங்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வே.பிரபாகரனின் படங்களைக் கையடக்கத் தொலைபேசியில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள் ளார். 19



# ஜனாஸாக்களை எரிக்காதீர்!

## இம்ரானின் வருகையின்போது கொழும்பில் கொந்தளிப்பு!

**கொழும்பு, பெப். 24**

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதை உடன் தடுத்து நிறுத்தக் கோரியும், ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றக் கோரியும் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.**






பலவந்த ஜனாஸா எரிப்புக்கு எதிரான தேசிய அமைப்பு மற்றும் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பேரணியில் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் ஆரம்பித்த இந்தப் பேரணி கொம்பனித் தெரு வரை நடத்தப்பட்டது. முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்காதே, அடக்கம் செய்ய அனுமதிக்கும் தீர்மானத்தை செயற்படுத்து போன்ற கோஷங்களுடன் இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் நேற்றைய இலங்கை வருகையை மையமாக வைத்தே, இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை ரிஷாத் பதியூதின் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் பாகிஸ்தான் பிரதமரை சந்திக்கவுள்ளனர் என முதலில் தகவல்கள் வெளியாகியிருந்த போதும், குறித்த சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டதன் பின்னால் அரசியல் நோக்கங்கள் எதுவும் இல்லை எனவும், இது பாகிஸ்தான் பிரதமரின் பயணம் தொடர்பாக முடிவுகளை எடுக்கும் குழுவின் தீர்மானமே எனவும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். (ம-22)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், பெப். 24

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமாகிய ஈ.சரவணபவனின் அனுசரணையில் ஜடாயு அமைப்பின் ஊடாக மூளாய் சைவப் பிரகாச மகா வித்தியாலய க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் 'அறிந்திரன் 'சஞ்சிகையும் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், இளைஞர் சேவைகள் மன்ற இயக்குநர் மதன், சிவில் சமூக செயற்பாட்டாளர் கிருஷ்ணபோஸ் சுதாகரன், வலிகாமம் மேற்கு இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் தசிகரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ம-319)



## வீட்டுக்குத் தீவைத்தது வாள்வெட்டுக் குழு

### உடுவிலில் பயங்கரம்

யாழ்ப்பாணம், பெப். 24

உடுவில் மல்வம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த மர்மக்குழு வீட்டின் ஜன்னல்களைத் தாக்கிச் சேதப்படுத்தியதுடன் வீட்டுக்குத் தீவைத்துத் தப்பிச் சென்றுள்ளது. வீட்டுக்குள் இருந்தவர்கள் விரைந்து செயற்பட்டதையடுத்து தீ கட்டுப்படுத்தப்பட்டது.

மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட குழுவே இந்த சமூக விரோதச் செயலில் ஈடுபட்டது. இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடத்தில் முறையிடப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-10)

## நிலக்சன் ஞாபகார்த்த விருது முனியப்பன் துலாபரணிக்கு

யாழ்ப்பாணம், பெப். 24



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழாவில் ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு வழங்கப்படும் யாழ் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் இந்த ஆண்டு முனியப்பன் துலாபரணிக்கு வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடக மாணவனாகப் படித்துக்கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி அதிகாலை 5 மணியளவில் அவரது வீட்டில் வைத்து பெற்றோர் முன்னிலையில் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அவரது நினைவாக மேற்படி விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

## 10 மில். தடுப்பூசியை பெறுவதற்கு அனுமதி

கொழும்பு, பெப்.24

இந்தியாவின் சீரம் நிறுவகத்திடம் இருந்து 10 மில்லியன் கொவிஸீல்ட் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவை செலுத்துவதற்கான திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று பதில் சுகாதார அமைச்சர் மருத்துவர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

மேலும், ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகளை பிரித்தானியாவின் தாய் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கும், அதேநேரம், உலக சுகாதார ஸ்தாபனத்தின் தடுப்பூசி வழங்கல் வேலைத்திட்டத்தின்கீழ், இலங்கைக்கு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்கான உடன்படிக்கைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-ற)

## எதிரணித் தலைவர்களினது குடியுரிமையைப் பறிக்கோம்

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு.பெப்.24

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எதிரணியிலுள்ள முன்னணி அரசியல் தலைவர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு முற்றாக நிராகரித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம், எதிரணியிலுள்ள அரசியல் தலைவர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று முன்வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

'ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலுள்ள விடயங்கள் தொடர்பில் போலியான சில தகவல்கள் அண்மைக் காலமாக பரப்பப்பட்டு வருகின்றன.

700 பக்கங்கள் கொண்ட அறிக்கை பெப்ரவரி முதலாம் திகதியே ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டு தற்போதே எமக்கு வழங்கப் பட்டது. இந்த வாரத்துக்குள் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்படும். தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சட்டமா அதிபரிடமும் கையளிக்கப் படும். இந்த விவகாரம் தொடர்பில் சட்டத்தைச் செயற்படுத்தும் பணிகள் யாவும் சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாகவே முன்னெடுக்கப்படும். இதில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இருக்காது. எவரின் குடியுரிமையைப் பறிப்பதற்கோ அல்லது சட்டத்தை செயற்படுத்தும்போது அரசியல் அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கோ அரசோ அமைச்சரவையோ முற்படாது' என்றார். (மக-44)

# இன அழிப்பை மூடி மறைக்கும் வகையிலே பிரிட்டனின் நகர்வு

## பிரிட்டன் தமிழர் இயக்கம் குற்றச்சாட்டு

**கொழும்பு, பெப். 24**
**தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பைத் தொடர்ந்தும் மூடி மறைக்கும் கோணத்தில் பிரித்தானியாவும் நகர்வுகளை முன்னெடுத்துச் செல்வது அப்பட்டமாகத் தெரிகின்றது என பிரித்தானிய தமிழர் இயக்கம் தெரிவித்துள்ளது.**

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் தொடர்பில் அவ் இயக்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

கடந்த நவம்பர் 16ஆம் திகதி நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா. பொதுச்சபையில் இடம்பெற்ற முறைசாராக் கூட்டத்தில் இலங்கை தொடர்பிலான புதிய தீர்மானத்தின் முன்மொழிவுகள் தொடர்பாக அதற்கு தலைமை தாங்கும் பிரித்தானியா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகள் கலந்துரையாடி முடிவுகளை எடுத்து, அன்றிலிருந்து அது தொடர்பிலான செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கத் தொடங்கிவிட்டன.

அதையடுத்து கடந்த தீர்மானங்களைப் போன்று இதனையும் இலங்கை அரசின் அனுசரனையுடன் நிறைவேற்றுவதனை நோக்காகக் கொண்டே அத்தீர்மானத்தின் வரைபை கடந்த வருடம் டிசெம்பர் மாதமே இலங்கை அரசுக்கும் அனுப்பியிருந்தனர்.

அந்தவகையில் 46ஆவது மனித உரிமைகள் கூட்டத்தொடரில் எமக்கான ஆதரவைக் கோரி மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளை இரண்டு மாதத்துக்கு முன்னரே நாம் தொடர்பு கொண்டபோது இலங்கை தொடர்பான புதிய தீர்மானத்துக்கான முன்மொழிவை பிரித்தானியா தமக்கு அனுப்பி வைத்துள்ளது என்று தெரியப்படுத்தியிருந்தனர்.

பிரித்தானியாவினால் அனுப்பிவைக்கப்பட்ட அம் முன்மொழிவு குறிப்பிட்ட அந்த உறுப்பு நாடுகளைப் பொறுத்த வரையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகவே இருக்கின்றது.

ஏனெனில் அந்த முன்மொழிவுகளில் இலங்கைக்கான சிறப்பு அறிக்கையாளரை நியமிக்க வேண்டுமென்ற எந்தவொரு கோரிக்கையும் இடம்பெறவில்லை என்றுள்ளது. (ப)

# பிரிட்டன் பிரேரணை ‘புஸ்வாணம்’

*கூட்டமைப்பின் பங்காளி கட்சியான ரெலோ காட்டம்*

கொழும்பு, பெப்.24
மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையில் இலங்கைமீது கொண்டு வரப்படஇருக்கும் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நீதியைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் காத்திரமானதாக அமைந்திருக்கவில்லை என்று ரெலோ கடும் விசனம் வெளியிட்டுள்ளது.

பிரிட்டனின் வெளிநாட்டு அலுவல்கள் அலுவலகத்துக்கு ரெலோவின் இங்கிலாந்து கிளையின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மனித உரிமைகள் ஆணைய ஆணையாளருடைய அறிக்கையில் பெரும் நம்பிக்கையோடு இருந்த எமக்கு, இந்த மாதிரி வரைவு வலிமையிழந்த நிலையிலே இருப்பதையும், அறிக்கையில் இடப்பட்ட விடயங்களிலிருந்து அதிக தூரம் விலகிச் செல்வதோடு, கடந்தகால பிரேரணைகளான 30/1, 34/1, 40/1 ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்ட பல விடயங்கள் தவிர்க்கப்பட்டு இருப்பதையும் அவதானிக்கிறோம்.

எங்களுடைய நீதிக்கான கோரிக்கைகள் பலவீனப்படுத்தப்பட்டுள்ளமையையும், மனித உரிமைகள் ஆணையம் மற்றும் உறுப்புரிமை நாடுகளின் மீது எம்மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை இழக்கச் செய்வதாக இருப்பதையும் உணர்வதால், சமர்ப்பிக்கப்பட இருக்கின்ற பிரேரணை, போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் வகையில் அமைய வேண்டுமே தவிர, குற்றவாளிகள் தப்பிக்க இடமளிப்பதாக இருக்கக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கியதாக திருத்தி அமைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (ப)

# ஏப்.21 தாக்குதல் அறிக்கை சபாநாயகரிடம் கையளிப்பு!



கொழும்பு,பெப். 24
ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. நாடாளுமன்ற வளாகத்தில் வைத்தே குறித்த அறிக்கை தனக்கு கையளிக்கப்பட்டது என்று சபாநாயகர் சபையில் தெரியப்படுத்தினார்.

அறிக்கை, நாடாளுமன்றத்தில் எம்.பிக்களுக்கான வாசிக்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. அதனை உறுப்பினர்கள் பார்வையிட முடியும். அறிக்கையின் பிரதிகள் கிடைக்கப்பெற்றதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்றும் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார். (ம-க,44)

# பிரிட்டன் மீது தார்மீகக் கோபம்

**நாடு கடந்த தமிழீழ அரசு காட்டம்**

யாழ்ப்பாணம், பெப்.24
இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைப்பதற்கான உலகளாவிய அறைகூவலைப் பூர்த்தி செய்ய ஒரு புதிய தீர்மானத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்று நாடு கடந்த தமிழீழ அரசு அனைத்து உறுப்பு நாடுகளையும் கேட்டுக்கொண்டுள்ளது.

ஆரம்பமாகியுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடர் அமர்வு தொடர்பில் தனது அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசு, இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது;

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பரிந்துரைப்பதன்மூலம் மட்டுமே பொறுப்புக்கூறலை அடைய முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்க நடவடிக்கை எடுக்குமாறு உறுப்பு நாடுகளை வெளிப்படையாக வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கோரிக்கை சமீபத்திய ‘பொ-பொ’ பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்களால் உறுதிப்படுத்தப்பட்டது. இலங்கை தொடர்பான முதன்மைக் குழு சமர்ப்பித்த ஆரம்ப தீர்மான வரைவு, இனப்படுகொலை, மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் புரிந்தவர்களைப் பொறுப்புக்கூற வைப்பதில் தோல்வியடைகிறது. நீதிக்காக போராடும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பூச்சிய வரைவு, பூச்சிய நீதி, மற்றும் பூச்சிய பொறுப்புக்கூறலை வழங்குகிறது. இதனால் நாங்கள் தார்மீகக் கோபம் அடைகிறோம். பேரவையின் கடமைகளையும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைப்பதற்கான உலகளாவிய அறைகூவலை பூர்த்தி செய்யவும் ஒரு புதிய தீர்மானத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்று நாடு கடந்த தமிழீழ அரசு அனைத்து உறுப்பு நாடுகளையும் கேட்டுக்கொள்கிறது - என்றுள்ளது. (ப)

# தமிழ் சந்ததியைப் பெருக்க தயாராகவேண்டும்

## இ.த.ஆ.சங்க பொதுச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.24
2021ஆம் ஆண்டு பாடசாலைகளில் தரம் 1க்கு இணைந்த மாணவர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களைவிட மிகவும் குறைவானதாகும். இது அபாயகரமானது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

உலக மக்கள் தொகை வருடந்தோறும் அதிகரித்துச் செல்கின்றதே தவிர குறைவடைவதில்லை. இலங்கையிலும் அதே நிலைதான். ஆனால் தமிழர் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இம்முறை மாணவர் தொகை குறைவடைந்துள்ளமை கவலையான விடயம் என்பதற்கு அப்பால் அபாயகரமானது. நாட்டில் நடைபெற்ற போர் நான்கு தசாப்தங்களைக் கடந்தது. அந்தக் காலங்களில்கூட பாடசாலைகளில் முதலாம் தரத்தில் இணைந்த மாணவர்களின் எண்ணிக்கை வருடந்தோறும் அதிகரித்தே சென்றது.

பிள்ளைகளைப் பெற்றால் வளர்ப்பது, பாராமரிப்பது, பாடசாலைகளில் சேர்ப்பது, கல்வியூட்டுவது, கண்காணிப்பது என்ற சுமைகளை மனதில் கொண்டு பிள்ளைகள் பெற்றுக்கொள்வதை பலரும் மட்டுப்படுத்தியுள்ளனர். இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாயும் எம்மத்தியில் எந்த பின்னடைவும் இல்லாமல் தனது பிள்ளைகளைச் சிறப்பாக வளர்த்துள்ளார்.

ஆனால் இன்று அரச சேவையில் உள்ள நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீதமானவர்கள் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொள்கின்றனர். மாதாந்த வருமானம் உள்ள அரச சேவையில் உள்ளவர்களே இவ்வாறு மட்டுப்படுத்தினால், வருமானமே இல்லாத பாமர மக்கள் எவ்வாறு குழந்தைகளைப் பெற்றெடுக்க முடியும். ஆகையால் சமூக அக்கறை கொண்ட அனைவரும் இதற்கான தீர்வுக்குரிய வழிகளைக் கண்டறிந்து பிறப்பு வீதத்தை அதிகரிக்க அல்லது சந்ததிப் பெருக்கம் ஏற்பட வழியேற்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# பிள்ளையாரும் காணாமல் போனார்

கிளிநொச்சி, பெப். 24
பூநகரி, சங்குபிட்டிப் பாலத்துக்கு அருகில் இரண்டு ஆல மரங்களின் கீழ் அண்மையில் வைக்கப்பட்ட பிள்ளையார் சிலை கடந்த சில தினங்களாக காணாமல் போயுள்ளது.

அதே வீதியில் தற்போது பொலிஸ் காவல் நிலையம் இருக்கும் இடத்துக்கு அருகில் முன்னர் ஒரு பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாகவே குறித்த சிலை அங்கு வைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே அந்தப் பிள்ளையார் சிலை காணாமல் போயுள்ளது.

வீதியோரமாக வைக்கப்பட்டிருந்த குறித்த பிள்ளையார் சிலையானது தங்களது அனுமதியின்றி, தங்கள் எல்லைப் பரப்புக்குள் வைக்கப்பட்டுள்ளது என்றும், அதனை அகற்ற உள்ளோம் எனவும் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கடந்த வாரம் பூநகரி பிரதேச செயலாளர் மற்றும் பூநகரி பொலிஸ் நிலையத்தில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-214)

# வெல்வது உறுதி

## பிரிட்டன் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.24
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகப் பிரித்தானியா கொண்டுவரும் பிரேரணையை வெற்றிகொள்வதில் தாம் உறுதியாக இருக்கின்றோம் எனவும், இது குறித்து சபையின் உறுப்பு நாடுகளுடன் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம் எனவும், இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சாரா ஹல்டன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோர் பிரித்தானியத் தூதுவரைக் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ப)

# ஏப்.21 குண்டுத் தாக்குதல்; எவர் மீதும் வழக்கில்லை

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.24
கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பில், நாட்டில் இதுவரை எவர் மீதும் வழக்குத் தொடரப்படவில்லை என்று எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் அமெரிக்காவில் தற்போது மூவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அவர்கள் அண்மையில் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள். இந்த நிலைமை குறித்து வெட்கமடைந்துள்ளோம்.

சாட்சிகளை அழிப்பதற்காகவே இவ்வாறு தாமதம் செய்யப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# 16 வயதானோருக்கே இனி வேலைவாய்ப்பு

கொழும்பு,பெப்.24
இலங்கையில் நபர் ஒருவரை வேலைக்கு அமர்த்துவதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை 14 வயதிலிருந்து 16 வயதாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது நாடாளுமன்றத்தில் சட்டப்பூர்வமாக்கப்பட்டுள்ளது என்று தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக ஒரு குழந்தையின் கட்டாயக் கல்வி வயது 16 வயதாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சட்டங்களில் குறைந்தபட்ச வயது வரம்பைத் திருத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-இ)

# ஏப்ரல்-21 விசாரணை அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிப்பு

கொழும்பு,பெப்.24
ஏப்ரல்-21 தாக்குதல் தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை, ஜனாதிபதியால் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பொலிஸ்மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்வதற்காக, குறித்த அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்புமாறு அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

600 க்கும் அதிகமான பக்கங்களைக் கொண்டுள்ள அறிக்கையின் சிங்கள மொழி பெயர்ப்பு, அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. அனைத்துப் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கான தகைமை சட்டமா அதிபருக்கு உள்ளது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

# தேர்தல் கால வாக்குறுதிகளை தொடர்ந்தும் நிறைவேற்றுவேன்

## கருணா அம்மான் சபதம்

கல்முனை,பெப்.24
தேர்தல் காலங்களில் மக்களுக்கு எம்மால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை தற்போது நிறைவேற்றி வருகின்றேன். தொடர்ந்தும் நிறைவேற்றுவேன் என்று தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

கல்முனையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்தும் விடயத்தில் ஒன்றையும் விட்டுக்கொடுக்க மாட்டோம். தொடர்ந்தும் இந்தத் திட்டத்தில் எமது முயற்சி தொடரும். மிக விரைவில் ஜனாதிபதியையும் சந்திக்கவுள்ளேன். அந்த சந்திப்பில் கூட கல்முனை விடயத்துக்கே முன்னுரிமை வழங்கவுள்ளேன். அதற்கான ஆவணங்களைத் தயார்படுத்தி வைத்துள்ளேன்.

பிரதமரிடம் எமது பிரதேச குறைபாடுகள் குறித்து நேரடியாக கலந்துரையாடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளோம். இது போன்று பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இங்குள்ள மக்கள் தங்களுக்கு ஒரு அரசியல் வெற்றிடம் உள்ளது. அல்லது பிரதிநிதிகள் இல்லை என்று கவலைப்படவேண்டாம். அனைத்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் நிறைவேற்றுகின்ற அதிகாரத்தை தற்போது பிரதமர் எனக்குத் தந்திருக்கின்றார். அதனூடாக கட்டம் கட்டமாக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். -என்றார். (க-இ)

# 207 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்!

தொழில்வாய்ப்புக்காக கட்டாருக்குச் சென்று பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளான 207 இலங்கையர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை நாடு திரும்பியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பணிப் பெண்களாக கட்டார் சென்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், இலங்கை இராணுவத்தால் தனிமைப் படுத்தல் நடவடிக்கைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இலங்கை அரசாங்கத்தின் திருப்பி அனுப்பும் விசேட திட்டத்தின் கீழ் இவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-இ)

# ரஞ்சனை சந்தித்தார் சஜித்

கொழும்பு,பெப்.24
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில், சிறைத் தண்டனை அனுபவித்துவரும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை, அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

இதன்போது, தற்போதைய சட்ட நிலைமையை விளக்கிய சஜித் பிரேமதாஸ, ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்றத்துக்கு அழைப்பது தொடர்பிலும் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# தனி மருத்துவமனையில் பரீட்சை எழுத ஏற்பாடு

கொழும்பு,பெப்.24
க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில், திடீரென எவருக்காவது கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டால், அவர்களை நவகமுவ மருத்துவமனையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளாகும் மாணவர்கள் மருத்துவமனையிலேயே பரீட்சை எழுதுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை செய்து கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# சா/த.பெறுபேறுகள் ஜூனில் வெளிவரும்

நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்வரும் ஜூன் மாதத்தில் வெளியிட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய ஜூன் மாதத்தில் இருந்து உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (க-இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தோல்விகளிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்

கடந்த ஆண்டு நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களத் தேசியக் கட்சிகள் கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தன. தமிழ்த் தேசியக் கட்சிகள் பிளவுண்டு, சிதறுண்டு இருந்தமை அதற்கு வாய்ப்பாகியது. தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒவ்வொன்றும் தமக்குள் முட்டி மோதி, சேறுவாரிப் பூசியதன் விளைவையே தேர்தல் முடிவாக அறுவடை செய்திருந்தன.

இந்த மோசமான பின்னடைவிலிருந்து பாடத்தைக் கற்றுத் தேறுவதற்கு, தங்களைக் கட்சிகளின் தலைவர்களாகக் கூறிக் கொள்பவர்கள் இன்னமும் தயாரில்லை என்பதுதான் வேதனை. ஆகக் குறைந்தது, தெற்கில் விஸ்பரூபமெடுத்து தமிழர்களின் இருப்பையே வழித்துத் துடைக்க முயலும் ராஜபக்சக்களின் பேரினவாதத்தை எதிர்ப்பதற்குக் கூட ஒன்றிணைவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இன்னும் தயாராயில்லை.

'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' பேரணி தமிழ் மக்களின் உயிரோட்டமான, ஆத்மார்த்த ரீதியிலான ஆதரவுடன் பேரெழுச்சி கண்டிருந்தது. தமிழ் மக்கள் இன்று எதிர்கொள்ளும் அடக்குமுறைகளைத் தகர்த்தெறிவதற்கும், தம் மண்ணில் தம்மைத் தாமே ஆட்சி செய்து வாழ்வதற்குமான உரிமையைக் கோரியும் நடந்தது அந்தப் பெரும் பேரணி.

இன்றைய சூழலில் தெற்கில் கிளர்ந்தெழுந்து தலைவிரித்தாடும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தை எதிர்க்கக் கிளம்பிய அந்தப் பேரணியின் தகிப்பைத் தக்க வைப்பதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் முயற்சிக்க வேண்டும். அந்தப் பெரும் முயற்சியை தமிழ்த் தேசியக் கட்சிகளில் ஒரு சாரார் ஒப்பேற்ற, முனையில் மற்றொரு தரப்பார் படுகுழிக்குள் தள்ள நினைக்கின்றனர்.

அப்படி ஒப்பேற்ற முனைபவர்களால் தமிழ்த் தேசியப் பேரவை என்னும் கூட்டை உருவாக்குவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் அந்த முயற்சி கருக்கட்டத் தொடங்கியிருக்கும் சூழலில் அதனை கருவறுக்கும் முயற்சிகளில் மற்றொரு சாரார் ஈடுபட்டிருப்பது வேதனையானதும், வெட்கப்பட வேண்டியதுமானஒன்று.

தமிழ்த் தேசியப் பேரவையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும், அது அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து கொள்வது தொடர்பில் தமிழர் தரப்பின் மூத்த அரசியல்வாதியான சம்பந்தர் விரும்பவில்லை என்ற செய்தி கவலைக்குரியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தாங்களாக வெளியேறிச் சென்றவர்கள், இப்போதும் கூட்டமைப்புடன் இணையலாம். அவ்வாறான நிலையில் அவர்களுடன் தனியாக ஏன் ஒரு கூட்டு என்று, இந்தப் பேரவையை நிறுவும் முயற்சிக்கு ஒத்துழைக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவிடம், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் கேட்டுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுவொன்றும் தேர்தலுக்கான கூட்டு இல்லை என்பதும், ராஜபக்சக்களின் எதேச்சாதிகாரப் போக்குக்கு எதிரான கூட்டு என்பதும் சம்பந்தருக்குத் தெரியாத ஒன்றல்ல. இப்போதைய சூழலில் தமிழ்த் தேசியக் கட்சிகளும், தமிழ் மக்களும் ஓரணியில் திரள்வதன் ஊடாகவே சிங்களப் பேரினவாதத்தை எதிர்க்க முடியும் என்கின்ற யதார்த்த சூழலில், அந்த ஒற்றுமைக்கான அணி திரள்வைத் தடுப்பதை, அதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்து கொண்டு சம்பந்தர் இப்படிச் செய்வது ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்று.

“நாம் நினைத்ததைச் செய்வோம். எம்மை யாரும் கேள்வி கேட்க முடியாது “என்ற தெனாவட்டில் நடந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் கடந்த தேர்தலில் புகட்டிய பாடம், அந்தக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தருக்கு நினைவிருந்தால் சரி. தடம்புரண்ட பாதையில் தொடர்ந்தும் பயணித்தால் இவர்களை மக்கள் அடியோடு தூக்கியெறியவும் தயங்கமாட்டார்கள்.இந்த உண்மையை தமிழ்த் தலைவர்கள் அனைவருமே உணர வேண்டும்.



நன்றி - அவந்த ஆட்டிகல

# ஜனாதிபதியின் அதிகாரத்தை நீக்க நிபுணர் குழுவுக்குப் பரிந்துரை

கொழும்பு,பெப். 24

**விசேட ஆணைக்குழுவை நியமிப்பதற்காக, ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் விசேட அதிகாரத்தை நீக்குமாறு, புதிய அரசமைப்பு தொடர்பிலான நிபுணர் குழுவினரிடம் பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதியின் ஆணைக்குழு அறிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளோம். சட்ட ஆட்சி கோட்பாட்டுக்கு அமைய, செயற்படுவதாகக் குறிப்பிட்டுக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசு, சட்டத்துக்கு முரணாகச் செயற்படுகிறது. அரசியல் பழிவாங்கல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை பொதுச்சட்டக் கோட்பாட்டுக்கு முரணானது. ஆகையால் அந்த அறிக்கையைச் செயற்படுத்துவதை அரசு தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையை சவாலுக்கு உட்படுத்தும் விடயங்கள் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அரசியல் நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. ஆகையால், அரசமைப்பால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுவை நியமிக்கும் விசேட அதிகாரம், புதிய அரசமைப்பின் ஊடாக நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை புதிய அரசமைப்பு தொடர்பிலான நிபுணர் குழுவினரிடம் முன்வைத்துள்ளோம். ஒரு சம்பவம் குறித்து ஆராய விசேட ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுமாயின், பொலிஸ் திணைக்களம், நீதிமன்றம் ஆகிய துறைசார் ஸ்தாபனங்கள் எதற்கு? அவ்வாறாயின் இந்த ஸ்தாபனங்கள் சுயாதீனமற்ற வகையில் செயற்படுகின்றனவா? என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது-என்றார். (க-இ)

## ரஞ்சனுக்கான பாதுகாப்பு பொறுப்பை ஏற்கின்றேன்

### லொஹான் ரத்வத்த அறிவிப்பு

கொழும்பு,பெப்.24

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பாதுகாப்பு வழங்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன் என்று சிறைச்சாலைகள் முகாமைத்துவ மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு விவகார இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்க தொடர்பாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெளிவான அறிவுறுத்தல்களை வெளியிட வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றில் நேற்றுக் கேட்டுக்கொண்டனர்.

அத்தோடு ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டும் என்றும் கோரி நாடாளுமன்றத்தில் போராட்டத்தையும் நடத்தினர்.

இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அங்குனுகொலபெலஸ்ஸ சிறையில் இருக்கும் ரஞ்சன் ராமநாயக்கவின் பாதுகாப்புக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறேன் என்றும் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். (க-இ)

## இளைஞன் கடத்தல் மூவர் கைது

கொழும்பு,பெப்.24

பலாங்கொடையைச் சேர்ந்த இளைஞன் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில், மூவர் பலாங்கொடைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 4 ஆம் திகதி இளைஞன் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டார். பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

# மொட்டு மலர்ந்துள்ளதால் தாமரை அவசியமில்லை

## புதிய கட்சி தொடர்பில் பியல் கருத்து



கொழும்பு,பெப்.24

நாட்டை நேசிக்கும், நாட்டைப் பற்றிச் சிந்தித்து வேலை செய்யும் தலைவரை மக்கள் நியமித்துள்ளனர். அதனால்தான், முழு இலங்கையிலும் மொட்டு மலர்ந்துள்ளது. மொட்டு மலர்ந்துள்ளதால், புதிய தாமரை மலருடன் கட்சியொன்றை இலங்கையில் அமைப்பதற்கு எவ்வித அவசியமும் இல்லை.

இவ்வாறு பெண்கள், சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவை இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சியின் கிளையொன்றை இலங்கையில் அமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கருத்து நகைப்புக்குரியது. இவ்வாறான அறிவிப்புகளால் இலங்கையிலுள்ள புத்திசாலி மக்களை, கோபப்படுத்த முடியாது. இந்தியாவிலுள்ள தமிழ் மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக இவ்வாறான அறிவிப்புகளை அந்த நாட்டு அரசியல்வாதிகள் விடுக்கக் கூடாது.

இந்தியாவில் நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ்நாட்டு மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்கில் இவ்வாறான கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான வெட்கமற்ற அறிவிப்புகள் ஊடாக, இந்திய மக்களை ஏமாற்ற முடியும். ஆனால், இலங்கையர்களை ஏமாற்ற முடியாது - என்றார். (க-இ)

## "பொ—பொ" பேரணி சுகாஷிடமும் வாக்குமூலம்

யாழ்ப்பாணம்,பெப்.24

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் பங்கேற்றமை தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர், சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார், அவரிடம் இந்த வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்டனர்.

நீதிமன்றத் தடை உத்தரவை மீறி பேரணியில் பங்கேற்றமை தொடர்பில் சட்டத்தரணி க. சுகாஷ் உள்ளிட்டோர் மீது பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஜ-26,159,20)

## விசாரணை அறிக்கையை வைத்து கண்ணாம்பூச்சி விளையாடாதீர்கள்

### முஜிபுர் ரஹ்மான் காட்டம்



கொழும்பு,பெப்.24

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விசாரணை தொடர்பான அறிக்கையை வைத்துக் கொண்டு, கண்ணாம்பூச்சி விளையாட வேண்டாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை ஆராய, அரசியல்வாதிகளைக் கொண்ட மற்றொரு குழுவை நியமித்து ஆராய்வதில் எவ்விதமான சுயாதீனமும் இல்லை. அரசைத் தொடர்ந்து கொண்டு நடத்தவும், தமக்குத் தேவையானவர்களைக் காப்பாற்றவும், தமக்குத் தேவையானவற்றை மறைப்பதற்காகவுமே உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

எமக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் இருக்கும் நம்பிக்கையைச் சீர்குலைக்கும் நடவடிக்கையே இந்த உபகுழு. இதனூடாக எவர், எவரையோ காப்பாற்றுவதற்கான முயற்சி எடுக்கப்படுகின்றது என்ற சந்தேகம் எமக்குள்ளது.

உபகுழுவின் உறுப்பினர்களில் பலர், பெரும் குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுத்தவர்கள். அந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்துகூட, அவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. எனவே, இவ்வாறு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களை, குழுவில் நியமித்தமை, அந்த நிபுணர் குழுவை அவமதிப்பதாகவே கொள்ளத்தக்கது - என்றார். (க-இ)

## மத அடையாளத்துடன் 300 கையுறைகள் மீட்பு

### மூவர் கைது

கண்டி,பெப்.24

கண்டி, பூஜாபிட்டியப் பகுதியில் மத அடையாளங்கள் பொறித்த கையுறைகளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

புத்த பகவான், இயேசு கிறிஸ்து மற்றும் அன்னை மரியாள் ஆகியோரின் படங்கள் பொறிக்கப்பட்ட 300க்கும் மேற்பட்ட கையுறைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

## துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது இருவருக்கிடையிலான மோதல்

பதுளை,பெப்.24

இருவருக்கிடையில் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினை, துப்பாக்கிப் பிரயோகத்தில் முற்றுப் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பசறை கொஸ்கொல்லையில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் சூடு குறிதவறி வெடித்தமையால், எவருக்கும் எவ்வித அனர்த்தங்களும் ஏற்படவில்லை.

சம்பவத்தையடுத்து அங்கு கூடிய மக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபரை மடக்கிப் பிடித்தனர். பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பயன்படுத்திய உள்ளூர்த் தயாரிப்பு துப்பாக்கியையும் பொலிஸார் மீட்டனர். (க-இ)

## அதிபரை இடமாற்றக் கோரி பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப்.24

யாழ்ப்பாணம் - சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபரை இடமாற்றம் செய்யுமாறு கோரி பெற்றோர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் பாடசாலைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்றது.

இது தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் கருத்து தெரிவித்ததாவது:

அதிபர் பாடசாலையைப் பொறுப்பேற்றதில் இருந்து இதுவரை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றகரமான செயற்பாடுகள் இடம்பெறவில்லை என்பதுடன் ஆசிரியர், மாணவர்கள் மற்றும் பெற்றோருடன் ஆரோக்கியமான உறவைப் பேணவில்லை. பாடசாலை மாணவர்கள்மீது அக்கறையுள்ள ஆசிரியர்களை பக்கச் சார்பாக செயற்பட்டு இடம்மாற்றம் செய்யும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளார்.

ஆகவே இப்படியான அதிபர் எமது பாடசாலைக்குத் தேவையில்லை. உடனடியாக புதிய அதிபரை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர்.

சம்பவ இடத்துக்கு வந்த வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பெற்றோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதேவேளை சுய விருப்பின் பெயரில் பாடசாலையை விட்டு இடமாற்றம் பெற்றுச் செல்வதாகத் தெரிவித்து அதிபர் கடிதம் ஒன்றை பிரதிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் கையளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் குறித்த பாடசாலையின் அதிபரிடம் கேட்ட போது "கருத்துத் தெரிவிக்கும் அதிகாரம் எனக்கு இல்லை" என்று பதிலளித்தார். (ஜ-319,27)

## கட்டுநாயக்க - புத்தளம் ரயில் சேவை நிறுத்தம்

கொழும்பு,பெப்.24

கட்டுநாயக்க மற்றும் புத்தளத்துக்கு இடையிலான ரயில் சேவை எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தளம் ரயில் பாதையில் முன்னெடுக்கப்படும் திருத்தப் பணிகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 8 மணி முதல் 28 ஆம் திகதி மாலை 8.30 மணி வரை குரண மற்றும் நீர்கொழும்பு ரயில் பாதை மூடப்படவுள்ளது. (க-இ)

## 'ஈஸி காஷ்' இல் போதை விற்பனை

### சந்தேகநபர் கைது

கொழும்பு,பெப்.24

குருவிட்ட சிறைச்சாலையிலிருந்து போதைப் பொருள்களை ஈஸி காஷ் வழியாக விநியோகம் செய்து வந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை வலான பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவரிடமிருந்து போதைப் பொருள்களை அவர் பெற்றுவந்திருப்பது தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து 20 லட்ச ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது. (க-இ)

# பட்டதாரி பயிலுநர்களுக்கு மார்ச்சில் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,பெப்.24

அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் பட்டதாரி பயிலுநர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிப்பதற்கான நேர்முகத் தேர்வு மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது.

கைதடி மாகாண சபை வளாகத்தில் அமைந்துள்ள பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகத்தில் இந்த நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

இதற்கான அழைப்புக் கடிதங்கள் பிரதிப் பிரதம செயலாளர்(நிர்வாகம்) பணியகத்தால் சம்பந்தப்பட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நேர்முகத் தேர்வுக்கு வரும்போது அச்சிட்ட இணையவழித் தரவுப்படிவம்,பயிற்சிக் காலப்பகுதி தொடர்பான திணைக்களத் தலைவரின் அறிக்கை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்(நிழற்பிரதியுடன்) திருமணமான பெண் ஆயின் விவாக சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பட்டச்சான்றிதழ் மற்றும் விரிவான பெறுபேற்று ஆவணம், பட்டதாரி பயிலுநர் நியமனக் கடிதம்,பட்டதாரி பயிலுநர் பயிற்சிக்காக கடமையேற்ற கடிதம், பிரிவு கிராம அலுவலரின் அறிக்கை , பிறப்பு சான்றிதழில் குறிப்பிட்டுள்ள பெயருக்கும் சான்றிதழ்களில் குறிப்பிட்டுள்ள பெயர்களுக்குமிடையில் வேறுபாடு காணப்படின் முறையான சத்தியக் கடதாசி ஆகியவற்றை நிழல்பிரதிகளுடன் கொண்டு வருமாறு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் அறிவித்துள்ளார். (ஐ-9)



## சா/த பரீட்சைக்கு அனுமதி அட்டை

கிளிநொச்சி, பெப்.24

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்விப் பொது சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

இந்தப் பாடசாலையில் நடைபெற்ற சமய வழிபாட்டைத் தொடர்ந்து சமயத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டன.

இதன்போது இந்துமத சிவாச்சாரியர், கத்தோலிக்க, கிறிஸ்தவ மத வணபிதா ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களை ஆசீர்வதித்தனர். (ற-12)

## அதிபர் அலுவலகம் உடைக்கப்பட்டு கணினி திருட்டு

சாவகச்சேரி, பெப்.24

பாடசாலை அதிபரின் அலுவலகம் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு அங்கிருந்து கணினி உட்பட இலத்திரனியல் சாதனங்கள் பல திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாடசாலை அதிபர் பாடசாலையைத் திறக்கச் சென்ற வேளையில், கதவு உடைக்கப்பட்டு காணப்பட்டது என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-9)

## தென்மராட்சி பிரதேசத்தில் "அழகிய சிறுவர் சமூகம்"

சாவகச்சேரி பெப்.24

தென்மராட்சி பிரதேச செயலக கலாசார அலகினர், கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் அழகிய சிறுவர் சமூகத்தை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

60 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள பிரதேசத்தில் தற்போது நுணாவில் கிழக்கு, மறவன்புலவு, கைதடி மேற்கு ஆகிய பிரிவுகளில் சிறுவர் சமூகம் அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய பிரிவுகளில், இவற்றை அமைக்கும் பணிகள் கலாசாரப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் ஆரோக்கியமான சிறுவர் சமூகத்தை நாட்டில் கட்டியெழுப்பும் நோக்குடன் சிறுவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரவும், கலாசாரத் திணைக்களத்தால் நடத்தப்படும் கலாசாரப் போட்டிகளில் சிறுவர் சமூகத்தை ஈடுபடுத்தவுமென அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் கிராம அலுவலர் பிரிவுகளில் அழகான சிறுவர் சமூகம் அமைக்கப்பட்டு வருகிறது. (பு-9)

# ஐ.நா. தீர்மானத்தாலேயே ஈஸ்டர் தாக்குதல் நடந்தது!

## தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, பெப்.23

2015ஆம் ஆண்டு இலங்கையில் பதவியேற்ற அரசு மனித உரிமைகள் அரங்கில் முன்னோடியில்லாத வகையில் எமது நாட்டுக்கு எதிரான தீர்மானத்தின் இணை அனுசரணையாளர்களாக இணைந்தது. இலங்கையின் அரசமைப்புக்கு இணங்காத மற்றும் வழங்க முடியாத பல கடமைகளை நிறைவேற்றியது. இது 2019ஆம் ஆண்டு நடந்த ஈஸ்டர் தின பயங்கரவாதத் தாக்குதல்களைப் புதுப்பிக்கும் நிலைக்கு தேசிய பாதுகாப்பை இட்டுச் சென்றது. அதனால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

அவர் மேலும் தெரிவித்ததாவது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத்தொடரில் நேற்று அவர் காணொலி வாயிலாக உரையாற்றினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னோடியில்லாத வகையில் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கையை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

இலங்கையை இன அடிப்படையில் பிரித்து ஒரு தனி அரசை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், மூன்று தசாப்தங்களாக நீடித்த பயங்கரவாத பிரச்சாரத்திற்குப் பின்னர், உலகின் இரக்கமற்ற பயங்கரவாத அமைப்பிலிருந்து ஒற்றையாட்சி அரசு, இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காக, இலங்கையின் வீர ஆயுதப் படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக நடுநிலையாக்கின. இலங்கையில் பணியாற்றிய ஜனாதிபதி மற்றும் இலங்கையின் எல்லைகளுக்கு அப்பால்



தனது பயங்கரவாதத்தை விரிவுபடுத்தி இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஆகிய இரண்டு உலகத் தலைவர்களைக் கொலை செய்த உலகின் ஒரே பயங்கரவாத அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகும். பயங்கரவாதத்தின் முடிவானது, அனைத்து இலங்கையர்களிலும் மிகவும் மதிக்கத்தக்க உரிமையான, சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய அனைத்து இலங்கையர்களின் உயிர் வாழ்வதற்கான உரிமைக்கு உத்தரவாதம் அளித்தது.

மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு இலங்கை மேற்கொண்டுள்ள இந்தத் தன்னார்வக் கடமைகளை இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்ட வகையில் செயற்படுத்துவதிலான தற்போதுள்ள வழிமுறைகளின் தொடர்ச்சி, ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசேட விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்தல், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைதல், காணிகளைத் திருப்புவதிலான முன்னேற்றம், வாழ்வாதாரத்தைக் குறைத்தல் மற்றும் அதற்கான புதிய வழிகளை உருவாக்குதல் போன்ற முன்னேற்றங்கள் குறித்து 2020 டிசெம்பர் மாதத்திலும், எமது கருத்துக்களுக்கான விரிவான புதுப்பிப்புக்களை 2021 ஜனவரி மாதத்திலும் வழங்கியுள்ளோம்.

இருந்தபோதும், இலங்கைக்கு எதிராக செயற்படும் கூறுகள் இந்த அமர்வின் போது இலங்கைக்கு எதிராக மற்றொரு நாடு சார்ந்த தீர்மானத்தை முன்வைக்க உத்தேசித்துள்ளன, இது மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை அடிப்படையாகக் கொண்டது. இலங்கையின் இந்த நிராகரிக்கப்பட்ட அறிக்கை முக்கியமாக உள்நாட்டு விடயங்களின் பல சிக்கல்கள் மற்றும் இறையாண்மை கொண்ட சுய மரியாதை மிக்க நாட்டின் விடயங்களை உள்ளடக்கிய வகையில், நியாயமற்ற முறையில் அதன் நோக்கத்தை விரிவுபடுத்தி மேலும் ஆணையை வழங்கியுள்ளது.

இந்த சபை அறிந்திருப்பதைப் போன்று, கடந்த நூறு ஆண்டுகளில் இது முழு உலகுக்கும் ஒரு முக்கியமான நேரமாகின்றது. கொவிட்19 தொற்று நோயைக் கடப்பதற்கும், நொறுங்கிய பொருளாதாரங்களைப் புதுப்பிப்பதற்கும் நாம் எடுக்கும் முயற்சிகளில் நாம் ஒன்றுபட வேண்டும். இந்த சபை உறுப்பினர்களிடம் அதன் தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பை கவனத்தில் கொண்டு, இலங்கைக்கு எதிரான எந்தவொரு தீர்மானத்தையும் நிராகரிப்பதன் மூலம் எமக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்த சபையின் வளங்களும் நேரமும் இலங்கையில் எந்த அளவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது தேவையற்றது என நாங்கள் நம்புவதுடன், அது உலகளாவிய தெற்கின் இறையாண்மை நாடுகளுக்கு குறை ஊக்கமளிக்கும் செய்தியைக் கொண்டு செல்கின்றது. இந்த சபைக்குள்ளான பிளவுகளிலிருந்து எழும் கோபம் மற்றும் வேதனையை விட, முன்னோடியில்லாத தொற்றுநோயை எதிர்கொள்வதன் மூலம், காலத்தின் தேவை ஒற்றுமையாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளைப் பார்க்கும்போது, இந்தத் தீர்மானத்தை சபை நிராகரித்து, மூட வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம். என்றார். (எ)

# பொருண்மியம் நலிவடைந்த மக்களே மன். நகரில் அதிகம்

## பிரதேச செயலர் தெரிவிப்பு

**மன்னார், பெப்.24**

**மன்னார் பிரதேச செயலகப் பிரிவானது, மன்னார் நகர் பிரதேச செயலகம் என அழைக்கப்படுகின்றபோதிலும், இங்குள்ள 49 கிராம அலுவலகர் பிரிவிகளில் 38 கிராம அலுவலகர் பிரிவுகளைச் சேர்ந்த கிராமங்கள் பெருண்மியம் நலிவடைந்த மக்களைக் கொண்டவையாகவே உள்ளன என்று மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தெரிவித்தார்.**

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமுர்த்தி வங்கியின் 3 கிளைகள் மன்னார் நகரப் பிரதேசத்தில் இயங்கி வருகின்றன. 10 ஆயிரத்து 155 குடும்ப ங்கள் சமுர்த்திப் பயனாளிகளாக உள்ளனர். பொருண்மியம் நலிவடைந்த நிலையில் 3 ஆயிரத்து 393 குடும்பங்கள் சமுர்த்தி பெறுவதற்காக காத்திருப்போர் பட்டியலில் காணப்படுகின்றன.

சமுர்த்தி பாதுகாப்பு நிதியத்தில் கடந்த 2020ஆம் ஆண்டில் ஆயிரத்து 246 பயனாளிகளுக்கு மொத்தமாக சமுர்த்தி வங்கியால் 21.3 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது - என்றார். (ப-60)

# அலுவலர்களுக்கு மாதாந்தம் சத்துணவு

சாவகச்சேரி,பெப்.24

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் மாதாந்தம் நடத்தப்படும் பணியக அலுவலர்களுக்கான கலந்துரையாடலில் சத்துணவு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஜனவரி மாதம் பனங்கிழங்குத் துவையலும், பெப்ரவரி மாதம் இராசவள்ளிக் கிழங்கும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு சத்துணவு வழங்கப்படும் என்று பணியக நலன்புரிச் சங்கத்தினர் தெரிவித்தனர். (ஜ-9)

# தென்னைச் செய்கையை ஊக்குவிக்க மானியங்கள்!

திருகோணமலை, பெப்.24

தென்னைப் பயிர்செய்கை சபையால் மூதூர் பகுதியிலுள்ள 63 தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு பசளை மானியம் மற்றும் நீர்ப்பாசன மானியங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மூதூர் பிரதேச சபையின் கேட்போர்கூட மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

மூதூரில் தென்னை பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வகையில், இத்திட்டத்தினுள் மூதூரில் உள்ள கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றிலிருந்து பயனாளிகள் செய்யப்பட்டனர். ஒவ்வொரு வருடமும் இந்த மானியத் திட்டம் தென்னைப் பயிர்ச்செய்கை சபையால் மூதூரில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-40)

# கடலாமைகளை பாதுகாக்கும் திட்டம் முன்னெடுப்பு

அம்பாறை, பெப். 24

கடலாமைகளைப் பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் கடற்படையினரால் 78 கடலாமைக் குஞ்சுகள் பொத்துவில், பானமை கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் கடலுக்குள் விடப்பட்டுள்ளன.

கடல் சார் சூழலின் உயிர்ப்பல்வகைத் தன்மையைப் பாதுகாக்க உதவும் வகையிலும், அருகிவரும் கடல் ஆமைகளைப் பாதுகாக்கும் பிரதான குறிக்கோளு டனும் இந்தக் கடல்சார் பாதுகாப்பு திட்டம் கடற்படை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-319)

# பேருந்து விபத்தில் 13 பேர் படுகாயம்

ஹற்றன்,பெப்.24

வீதியின் குறுக்கே சென்ற பவுஸருடன் மோதியபேருந்து மண்மேட்டில்மோதுண்டு குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் 13 பேர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது. பேருந்தில் சென்றவர்கள் மொனராகலைப் பகுதியிலிருந்து தலவாக்கலை நோக்கி மரண வீடொன்றுக்காகப் பயணித்துள்ளனர். (க-இ)

# நடைபாதைத் திட்டம் கை நழுவின் தடையாக இருப்போரே பொறுப்பு

## மன். பிரஜைகள் குழு தெரிவிப்பு

மன்னார், பெப்.24

நகர அபிவிருத்திச் சபையால் மன்னாரில் மேற்கொள்ள இருக்கும் அபிவிருத்தி திட்டம் கைநழுவிப் போனால், அந்த அபிவிருத்திக்கு இதுவரை தடையாக இருப்போரே பொறுப்புக் கூற வேண்டும் என்று மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்ட மக்களால் மன்னார் பிரஜைகள் குழுவிடம் முன்வைக்கப் பட்டுள்ள முக்கிய ஒரு சில பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நோக்குடன் பிரஜைகள் குழுவின் ஆளுநர் சபை, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் மற்றும் மன்னார் நகர சபைத் தவிசாளர் ஞா.அன்ரனி டேவிட்சன் ஆகியோரை தனித்தனியே சந்தித்து. இதனை அடுத்தே பிரஜைகள் குழு மேற்கண்டவாறு தெரிவித்தது.

மன்னார் அபிவிருத்திக்காக நகர அபிவிருத்திச் சபையால் முன்னெடுக்கப்படவிருந்த அபிவிருத்தித் திட்டம் மன்னார் நகரசபை மற்றும் மன்னார் பிரதேச சபை ஆகியவற்றுக்கிடையேயான முரண்பாடுகளால் கைநழுவிச் செல்லும் அபாயம் தோன்றியுள்ளது. அவ்வாறு திட்டம் கை நழுவுமாக இருந்தால், அதற்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்புக் கூறவேண்டும் என்று பிரஜைகள் குழு மேலும் தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்திச் சபை, மன்னார்த் தீவின் நுழைவாயிலான மன்னார் பாலத்துக்கு அருகில். 420 மில்லியன் ரூபா செலவில் எட்டு அடி அகலமும் ஒன்றரை கிலோ மீற்றர் தூரமும் கொண்ட நடை பாதையையும், அதனுடன் இளைப்பாறுவதற்கான பூங்கா ஒன்றையும் அமைப்பதற்காகத் திட்டமிட்டிருந்தது. அதை இரண்டு வருடங்கள் கொண்ட திட்டமாகச் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-60)

# குடைசாய்ந்தது கனரக வாகனம்



கொடிகாமம், பெப்.24

தென்மராட்சி உசன் பகுதியில் கனரக வாகனம் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்கு உள்ளானது.

தென்பகுதியில் இருந்து பொருள்களுடன் வந்துகொண்டிருந்த கனரக வாகனமும், அதன் முன்னால் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரமும் ஒன்றை ஒன்று முந்திச்செல்ல முற்பட்ட வேளை தென்பகுதியில் இருந்து பொருள்களுடன் வந்து கொண்டிருந்த கனரக வாகனம் தலைகீழாக கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. எனினும் சாரதி மற்றும் உதவியாளர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-20,9)

# மனைப்பொருளியல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலைய மனைப்பொருளியல் டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு நேற்று நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் கலந்துகொண்டார்.

குறித்த நிகழ்வில் டிப்ளோமா கற்கை நெறி மாணவர்களுக்கான சான்றிதழ்களும்,சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன. நேர்மைக்கு முகுடம் விருது வென்றமைக்காக பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் கௌரவிக்கப்பட்டார். (ஜ-320)

### பன்னங்கண்டியில்

# கழிவுகள் கொட்டுவதை தடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, பெப்.24

கிளிநொச்சி, பண்ணங்கண்டி ஆற்றுப்பகுதியில் பலர் தமது அன்றாடக்கழிவுகள், மாமிசக்கழிவுகள் மற்றும் வர்த்தகக் கழிவுகள் என பலவகைக் கழிவுகளைக் கொட்டுகின்றனர் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

குறித்த கழிவுகள், இரவு வேளைகளில் வாகனங்களில் ஏற்றிவரப்பட்டு, அங்கு கொட்டப்படுகின்றன. அவை மழைவெள்ளத்துடன் அள்ளுண்டு மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் வருவதுடன், துர்நாற்றமும் வீசுகிறது. இதனால் டெங்கு நுளம்புப் பெருக்கமும் அதிகரித்துள்ளது. நெடுங்காலமாகவே இவ்வாறு கழிவுகள் கொட்டப்படுகின்றன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்களால் கோரப்பட்டுள்ளது. (ப-113)

# பதுளையில் அறுவர் சாவு

பதுளை,பெப்.24

பதுளை மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் கொவிட் 19 தொற்றால் ஆறு மரணங்கள் சம்பவித்துள்ளன.

ஆறு மரணங்களில் நான்கு ஆண்களும், இரு பெண்களும் அடங்கியுள்ளனர்.

அதேவேளை பதுளை மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களாக 584 கொரோனாத் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டனர். இவர்களில் 6 பேர் மரணமாகினர். 280 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். ஏனையோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (க-இ)



சாரணிய இயக்கத்தின் தலைவர் பேடன் பவலின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் 22ஆம் திகதி திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். சிறிதரன் தலைமையில் விபுலானந்தா கல்லூரியில் மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர், திருகோணமலை மாவட்ட சாரணர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-40)

## இலங்கையர் இருவர் இத்தாலியில் கொரோனாவால் சாவு

கொழும்பு, பெப்.24
இத்தாலியில் வசித்து வந்த இலங்கையர் இருவர், கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
கொழும்பு கொட்டாவ பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய நபரும் காலியைச் சேர்ந்த 52 வயதுடையவருமே கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இத்தாலியில் உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. (ச-இ)



ஒரு லட்சம் மரக்கன்றுகளை நாட்டும் தேசிய சாரணர் நிகழ்ச்சித் திட்டத்தை கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆரம்பித்து வைத்தார். உலக சாரணர் இயக்கத்தின் நிறுவுநர் பேடன்பவல் பிரபுவின் 164 வது பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டது. (ய)


## சர்வதேச பேச்சு போட்டியில் மெதடிஸ்த கல்லூரி வெற்றி

திருகோணமலை, பெப்.24
கடந்த ஆண்டு கொரோனாத் தொற்றுக் காரணமாக நாட்டில் கல்வி நடவடிக்கைகள் முடக்கப்பட்டிருந்த நிலையில் இந்தியாவின் பெங்களூர் வித்யா நிகேதன் சர்வதேச பாடசாலையால் இணைய மூலமாக நடத்தப்பட்ட சர்வதேச பேச்சுப் போட்டியில் திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவிகள் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளனர்.
இவர்களுக்கான சான்றிதழ்கள் குறிப்பிட்ட நிர்வாகத்தால் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச-40)

# 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக செயற்படுத்தவேண்டும்

### இந்தியாவின் நிலைப்பாடு இது

**கொழும்பு, பெப்.24**
**13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை ஏற்படுத்த முடியும் என்று இந்தியாவின் நிலைப்பாட்டை இந்தியத் துணைத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.**



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் இலங்கைக்கான பிரதி இந்திய உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போதே பிரதி உயர்ஸ்தானிகர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். அத்துடன் 'வடக்கு , கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் இந்திய தூதரகம் ருவிற்றர் பதிவொன்றின் மூலம் தெரிவித்துள்ளது. (ஐ-இ)

## இளம்பெண் உயிர்மாய்ப்பு

மட்டக்களப்பு, பெப்.24
மட்டக்களப்பில் திருமணமாகி ஒரு மாதமேயான நிலையில் இளம் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள செட்டிபாளயம் பிரதேசத்தைச் சேர்ந்த செனஸ்சங்கரி (வயது-26) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## சுதந்திரக் கட்சியின் விசேட கூட்டம்

கொழும்பு.பெப்.24
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட மத்திய குழுக் கூட்டம் இன்று மதியம் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.
கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகத்தில், கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது. கூட்டத்தில் எதிர்கால அரசியல் திட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் என்று கட்சியின் உப தலைவர் ரோஹன லக்ஸ்மன் பியதாச தெரிவித்துள்ளார். (க-இ)

## கணவன் தாக்கியதில் மனைவி உயிரிழப்பு!

திருகோணமலை, பெப்.24
திருகோணமலை கந்தளாய்ப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நடுவீதியில் வைத்து மனைவியைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிய நபரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் கடமையாற்றி வரும் கந்தளாய்ப் பகுதியைச் சேர்ந்த தொலஸ்வாகே கெதர சமிந்த ஜயலத் (வயது49) என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, காயமடைந்த மனைவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக் காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-இ)


## விதிகளை மீறிய 3,200 பேர் கைது!

கொழும்பு, பெப்.24
சுகாதார விதிமுறைகளை மீறியமை தொடர்பாக நேற்றுமுன்தினம் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். மேலும், இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 18 பேர் ஒரே விடுதியில் தங்கியிருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
அத்துடன் சுகாதார விதிமுறைகளை மீறியமை தொடர்பாக இதுவரை நாட்டில் 3 ஆயிரத்து 200 பேருக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற-இ)

## சா/த வகுப்புகளுக்கு நள்ளிரவு முதல் தடை

கொழும்பு, பெப்.24
கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகள் முடிவடையும் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிவரை பரீட்சார்த்திகளுக்காக பிரத்தியேக வகுப்புகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நடத்துதல் என்பவை நேற்று நள்ளிரவு முதல் தடைசெய்யப்பட்டுள்ளன என்று பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. அதேபோன்று, பரீட்சை தொடர்பான கருத்தரங்கு, பயிற்சிப்பட்டறை, மாதிரி வினாத்தாள்களை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல் என்பனவும் தடைசெய்யப்பட்டுள்ளன. பரீட்சை வினாக்கள் தொடர்பான அல்லது அது சம்பந்தப்பட்ட சுவரொட்டிகள், பதாகைகள், கையேடுகளை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் பிரசுரித்தல் என்பவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவுகளை மீறுபவர்கள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது 1911 என்ற துரித எண்ணுக்கோ அறிவிக்க முடியும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. (ப)

## ரணில் ஜனாதிபதியானால் நாடு சக்திமிக்கதாக மாறுமாம்!



கொழும்பு.பெப்.24
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் இலங்கை ஆசியாவில் சக்திமிக்க நாடாக மாற்றமடையும் என்று அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.
இதன் காரணமாகவே உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் விக்ரமசிங்க தாக்கப்படுகிறார்.
அத்துடன் கடந்த தேர்தலில் 2 லட்சத்து 50 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற பின்னரும் கட்சி வீழ்ச்சியடையவில்லை.
எனவே அது கட்சிக்கு பெரும் பலம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
கரந்தெனியவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் சந்திப்பின் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (ஐ-இ)

# ஆடைத் தொழிற்சாலையால் கொரோனா; பணியாளர்களை வழிமறித்து கவனவீர்ப்பு

## முல்லையில் நேற்று அதிகாலை சம்பவம்

**கிளிநொச்சி, பெப்.24**

**கிளிநொச்சியில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச்செல்லும் பேருந்துக்களை மறித்து மக்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளார்கள்.**



இந்தச் சம்பவம் நேற்று முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட வள்ளுவர்புரம்,மாணிக்கபுரம் பகுதியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் ஆடைத்தொழில்சாலையில் பணியாற்றும் முல்லைத்தீவு, மாணிக்கபுரம்,வள்ளுவர்புரம் கிராமங்களைச் சேர்ந்த சிலருக்கு கொவிட் 19 உறுதி செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து கிராமத்து மக்களை கொவிட் 19 தொற்றில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் கிராம மட்ட அமைப்புக்களால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக கிராமத்தில் இருந்து ஆடைத் தொழிற்சாலைக்கு செல்வோர் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதனடிப்படையிலேயே கிராமத்தில் இருந்து நேற்று அதிகாலை, ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற இரண்டு பேருந்துகளை கிராமத்தில் இருந்து வெளியில் செல்லவிடாமல் மக்கள் தடுத்து கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு வந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் பேருந்துக்களைச் செல்லவிடுமாறு அறிவுறுத்தியும் மக்களால் பேருந்து தடுக்கப்பட்டு அதில் பயணித்தவர்கள் இறக்கப்பட்டனர். ஆடைத்தொழில் திணைக்க ளத்தின் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து கிராம அமைப்பினருடன் பேசினர்.

இதன்போது புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார அதிகாரியைச் சந்தித்து அவரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக செயற்பட இணக்கம் காணப்பட்டது. (ப-19)

# ரஞ்சனை சிறைக்குள்ளேயே கொல்வதற்கு சதித் திட்டம்!

*ஐக்கிய மக்கள் சக்தி பகீர் தகவல்*

கொழும்பு.பெப்.24



ரஞ்சன் ராமநாயக்கவை சிறைச்சாலைக்குள்ளேயே மிகவும் சூட்சுமமாக கொலைசெய்வதற்கான திட்டம் இருப்பது தொடர்பில் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில், பொதுமனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியவை முடிவடைந்த பின்னர் பிரிவு, 27/2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் வினாக்களை எழுப்பினார். இவற்றுக்கு இராஜங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் பதிலளித்தார். அதன்பின்னர் ரஞ்சன் ராமநாயக்க விவகாரம் தொடர்பில் கேள்வி எழுப்புவதற்கு எதிரக்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முற்பட்டார். எனினும், அவருக்கு உரிய வாய்ப்பு வழங்கப்படவில்லை. தனக்கு வாய்ப்பு வழங்குமாறு பிரதிச் சபாநாயகர் ரஞ்சித் சிலம்ப லாப்பிட்டியவிடம் சஜித் தொடர்ச்சியாக வலியுறுத்தினார்.

இதனால் ஆளும் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கிடையில் சபைக்குள் கடும் சொற்போர் மூண்டது. பிற்பகல் 1 மணிக்கு சபை ஒத்திவைக்கப்படும் வரை அது தொடர்பான சர்ச்சை நீடித்தது.

இந்தச் சர்ச்சைக்கு மத்தியில் கருத்து வெளியிடுகையிலேயே நளின் பண்டார இந்தத் தகவலை வெளியிட்டார். " ரஞ்சன் ராமநாயக்க இன்னமும் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். அவரது பதவி பறிக்கப்படவில்லை. எனினும், அரசு அவரை ஒளித்து வைத்துள்ளது. ரஞ்சனுக்கு ஏன் இவ்வளவு பயம்? குடுக்காரர்கள் மற்றும் கொள்ளையர்களுக்கு எதிராக ரஞ்சன் ராமநாயக்க போராடியவர். ஆனால் குடுக்காரர்கள் மற்றும் கொள்ளைக்காரர்களுக்கு மத்தியில் அவர் சிறைவைக்கப்பட்டுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவை சிறைச்சாலைக்குள்ளேயே சூட்சுமமான முறையில் கொலை செய்வதற்கான திட்டம் இருப்பது குறித்து தகவல் கிடைத்துள்ளது. ஒரு எம்.பியாக நாடாளுமன்றம் வருவதற்கான உரிமை ரஞ்சனுக்கு இருக்கின்றது. அதனை ஏன் சபாநாயகர் தடுக்க வேண்டும். சபாநாயகர் பக்கச் சார்பாக, அரச பிரதிநிதிபோல்வே செயற்படுகின்றார். ரஞ்சனை சபைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை சபாநாயகர் முன்னெடுக்க வேண்டும்." என்றார். (க-44)

# கலாசார நிலையத்தை தக்கவைக்க கைகொடுங்கள்!!!

***வடக்கு மாகாண சபையைக் கோருகிறார் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்***

யாழ்ப்பாணம், பெப்.24



யாழ்ப்பாணம், கலாசார மத்திய நிலையத்தைப் பாராமரிக்க, யாழ்ப்பாண மாநகர சபையுடன், வடக்கு மாகாண நிர்வாகமும் இணைந்து நிதி மூலங்களை ஏற்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

யாழ்ப்பாணம், பொது நூலகத்துக்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையத்தின் நிர்வாகம், மற்றும் பராமரிப்புத் தொடர்பாக பல சர்ச்சைக்குரிய கருத்துக்கள் ஊடகங்களில் வெளிவருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இந்தியாவின் பெரும் நிதிப் பங்களிப்பில் பல்வேறு வசதிகளை உள்ளடக்கியதாக இந்தக் கலாசார மத்திய நிலையம் அமைக்கப்பட்டது. இதன் பராமரிப்புக்கு போதுமான நிதி வசதி யாழ்ப்பாண மாநகர சபையிடம் இல்லை என்பது யதார்த்தமானது. எனினும் அதன் நிர்வாகம் யாழ்ப்பாண மாநகரசபையிடம் இருத்தல் வேண்டும் என்பது எவ்வித கேள்களுக்கும் அப்பாற்பட்டது. எனவே இந்த விடயத்தில் தனித்து மாநகர சபைமீது பெரும் நிதித் தாக்கத்தை சுமத்தி மக்களின் சேவைகளைப் பாதிப்படைய வைக்காமல் தேவைப்படும் நிதிமூலங்களுக்கான வாய்ப்புகளை வடக்கு மாகாண நிர்வாகமும் இணைந்து முன்னெடுக்க வேண்டும் எனவும், இதன் நிதித் தாக்க விடயத்தில் கவனமும், கட்டுப்பாடும் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன் என்றுள்ளது. (ப)

# சாக்கு சாமியாரின் யாத்திரை முடிவு

கொழும்பு,பெப்.24

இலங்கை நாட்டு மக்களிடம் இன மத ஒற்றுமை மற்றும் கொரோனாத் தொற்று நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு களப்பணியில் உள்ளவர்களின் நலம் வேண்டியும், சாக்கு சாமியார் என அழைக்கப்படும் கிறிஸ்தோப்பர் கிருஷ்ணன் டயஸ் என்பவரது பாதயாத்தரை களனி விகாரையில் முடிவடைந்தது. சாமியார் மன்னார் மாவட்ட செயலகத்திலிருந்து கடந்த 4 ஆம் திகதி கொழும்பு நோக்கி தனது பாத யாத்திரையை ஆரம்பித்தார்.

19 நாள்களின் பின்னர் நேற்று க்ளனி விகாரையில் பாத யாத்திரையை பூர்த்தி செய்தார். (க-60)

# போராட்டங்களுக்கு நிதி எங்கிருந்து வருகின்றது?

## துருவுகின்றது ரி.ஐ.டி.

வவுனியா,பெப்.24

காணாமல்ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சங்கத்தின் செயலாளரிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவு விசாரணையை மேற்கொண்டுள்ளது.

வவுனியாவில் கடந்த ஆயிரத்து 465 நாள்களாக சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் கோபாலகிருஸ்ணன் ராஜ்குமாரிடமே விசாரணை மேற்கொள்ளப்பட்டது. தொடர் போராட்டம் மேற்கொண்டுவரும் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக அமைந்துள்ள கொட்டகையில் வைத்தே இந்த விசாரணை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட் டது.

விசாரணையின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்ததாவது;

கடந்த டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி அமெரிக்க,ஐரோப்பிய ஒன்றிய கொடிகளுடன் வவுனியா நகரசபை மண்டபத்தில் இருந்து நடை பயணமாக வந்தீர்களா என கேட்டிருந்தனர். பலவருடங்களாக போராடிவரும் நிலையில் எமக்கான நீதி கிடைக்கப்பெறவில்லை. இந்த நிலையில் இலங்கை அரசுமீது நம்பிக்கை இழந்துள்ளநாம் எமக்கான நீதியை பெறுவதற்கு சர்வதேசத்தின் உதவியை நாடியுள்ளோம் என்று அவர்களிடம் தெரிவித்திருந்தேன். போராட்டங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து நிதி வருகின்றதா என அவர்கள் கேட்டிருந்தனர். நாங்கள் நீதியை மாத்திரமே எதிர்பார்த்து நிற்கின்றோம் நிதியை அல்ல என்ற விடயத்தை அவர்களுக்கு உறுதியாகக் கூறியிருந்தேன் - என்றார். (ஐ-110)

## சா/த பரீட்சைக்கான ஏற்பாடுகள் பூர்த்தி

சாவகச்சேரி பெப்24

எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குரிய அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தென்மராட்சி கல்வி வலயத்தினர் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள 3 பரீட்சை இணைப்பு நிலையங்களும், 19 பரீட்சை நிலையங்களும் பொறுப்பேற்கப்படவுள்ளன எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ம-9)


## மின்வாடிக்கையாளர் உப அலுவலகம் அமைக்கக் கோரிக்கை

பளை, பெப்.24

இலங்கை மின்சாரசபையின் கிளிநொச்சி மின்வாடிக்கையாளர் அலுவலகத்தின் உப அலுவலகத்தை பளைப் பிரதேசத்தில் திறக்க வேண்டும் என்று பளைப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினர் கோரியுள்ளனர்.

பிரதேசத்தில் பெருமளவானோர் மின் இணைப்புகளைப் பெற்றுள்ளனர். சில வேளைகளில் மின் வழியில் தடங்கல் ஏற்பட்டால் கிளிநொச்சிக்கு அறிவித்து பணியாளர்கள் வருவதற்கு பல மணிநேரம் எடுக்கிறது. இதனால் மின் தடங்கல் சீர்செய்வதில் தாமதம் ஏற்படுகிறது.

பளையில் ஏற்கனவே மின்சார சபையின் கட்டடம் உள்ளதால் அதனைப் புனரமைத்து உப அலுவலகமாக செயற்படுத்தினால் பிரதே சத்தில் ஏற்படும் பல்வேறு மின்பாதிப்பு களை உடனுக்குடன், சீர்செய்ய முடி யும். இதேவேளை, புதிய மின் இணைப்புப் பெறுவோர் கிளிநொச்சிக்குச் செல்ல வேண்டியுள்ளது. புதிய மின் இணைப்புக்களுக்கு பணம் செலுத்துவோருக்கு மின் இணைப்பு வழங்கவும் காலதாமதம் ஏற்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டி விரைவில், பளையில் மின்வாடிக்கையாளர் உப அலுவலகத்தை திறக்குமாறும் கோரியுள்ளனர். (ற-9)



# 21,000 டொலர் செலவில் நேர் நிகர் வகுப்பறை

வவுனியா,பெப்.24

**இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் அலெய்னா பி.டெப்லிட்ஸ் வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலத்தில் மேம்படுத்தப்பட்ட நேர் நிகர் வகுப்பறை ஒன்றை நேற்று ஆரம்பித்து வைத்தார்.**

நேர்நிகர் வகுப்பறைகள் ஊடாக பல்வகை மாணவச் சமூகங்களுக்கிடையிலான பரஸ்பர உறவை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் இதனை ஆரம்பித்துள்ளார்.

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் அமைப்பின் 21 ஆயிரம் அமெரிக்க டொலர் மதிப்பான நிதியில் வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயம் மற்றும் திருகோணமலையில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் இந்த நேர்நிகர் வகுப்பறைகள் அமைக்கப்பட்டன. அதனை உத்தியோகபூர்வமாக அமெரிக்கத் தூதுவர் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், பாடசாலையின் அதிபர் நந்தபாலன், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-110)



மன்னார் றோ.க.த.க.பாடசாலை, நேற்றுமுன்தினம் பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் நடைபாதை, பாடசாலை வளாகம், விளையாட்டு மைதானம் போன்றவற்றில் மழை நீர் தேங்கி நிற்கின்றமையால் தொற்று நோய்கள் பரவும் வாய்ப்பு உள்ளது. மேலும் இந்தப் பாடசாலையில் குடிதண்ணீர் பிரச்சினை உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ய213)

## 2 கிராம் போதைப் பொருள் வைத்திருந்தவருக்கு மறியல்

சாவகச்சேரி, பெப். 24

2 கிராம் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் போதைப்பொருள் விற்பனை, பாவனை இடம்பெறுகிறது என்று சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கோப்பாய் பொலிஸ் நிலைய மோப்ப நாயின் உதவியுடன், பொலிஸார் தேடுதல் நடத்தினர். இதன்போது 2 கிராம் 350 மில்லி கிராம் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப் பட்டார். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் மன்று சந்தேக நபரை மார்ச் 5ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (ம-9)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் பன்ன வேலைப் பயிற்சி வகுப்புகள் நகரசபை உறுப்பினர் க. தர்சனால் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ய-9)

## மரம் நடுகை

கிளிநொச்சி, பெப்.24

திருவையாறு மகாவித்தியாலயத்திலிருந்து இரணைமடு கனகாம்பிகை அம்பாள் கோயில் வரையான வீதியின் இருமருங்கிலும் சுமார் 500 மரக்கன்றுகள் நேற்றுமுன்தினம் நடப்பட்டன.

உலக சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன்பவல் பிரபுவின் 164 ஆவது பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையில் இந்த மரக்கன்றுகள் நடப்பட்டன. ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடும் கற்பகா செயற்றிட்டத்தின் கீழ், இந்த மர நடுகைத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், இவர்களுக்கு ஆதரவாக திருவையாறு மக்கள், திருவையாறு பாடசாலை அபிவிருத்திக் குழு, அம்பாள் நகர் கி.அ.சங்கம், திருவையாறு மத்திய விளையாட்டுக் கழகம் மற்றும் கிளிநொச்சி இலங்கை சாரணர் சங்கம் எனப் பல அமைப்புக்கள் இணைந்து இந்த மரம் நடுகைத் திட்டத்தை மேற்கொண்டனர். (ற-10)





## இந்தியாவிடமிருந்து நாளை வருகின்றன 5 லட்சம் தடுப்பூசிகள்

கொழும்பு, பெப். 24

இலங்கைக்கு மேலும் 5 லட்சம் தடுப்பூசிகளை வழங்க இந்தியா உறுதியளித்துள்ளது என பதில் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேலும் 5 லட்சம் தடுப்பூசிகள் இந்தியாவிடம் இருந்து இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன. அதன்படி நாளை வியாழக்கிழமை இரவு இந்தத் தடுப்பூசிகள் இலங்கையை வந்தடையும் என்றார்.

இந்தியாவிடம் இருந்து சீரம் நிறுவனம் தயாரித்த 5 லட்சம் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகளை இலங்கை நன்கொடையாகப் பெற்று பொதுமக்களுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ச)

## சாரணியத் தந்தையின் 164 ஆவது பிறந்ததினம்!

கிளிநொச்சி, பெப்.24

சாரணியத்தின் தந்தை பேடன் பவலின் 164 ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் பூலோகராஜாவின் தலைமையில், சாரணியத்தின் தந்தை பேடன் பவெலின் திருவுருவப்படத்துக்கு மாணவர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து சாரணியத் தந்தை தொடர்பான நினைவுரைகளும் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலையின் சாரணிய மாணவர்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற-12)

## இன்றைய நாள்

**மேடம்**: பாராட்டுக் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். சக பணியாளர்கள் உங்களைப் புரிந்து கொள்வதால் நன்மை வரும். காணாமல் போன முக்கியப் பொருள் கிடைக்கும்.

**இடபம்**: நண்பர்களின் உரையாடலால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். பெரியவர்கள் உங்களுக்கு அளிக்கும் ஆலோசனையை ஏற்பீர்கள். கற்பனைக் கவலைகளைத் தூக்கி எறிவது நல்லது.

**மிதுனம்**:நிறைவான நாள். பகையைத் தீர்க்கும் முயற்சி வெல்லும். செலவைத் தவிர்ப்பீர்கள். பேச்சால் பிறரை மகிழ்விப்பீர்கள். பணியில் கவனம் தேவை. உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**கடகம்**மகிழ்வித்து மகிழ்வீர்கள். நல்லவர் நட்பு புதுப்பிக்கப்படும். கற்ற விஷயத்தை மற்றவர்களுக்கு சொல்லித் தருவீர்கள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள்.

**சிம்மம்**: ஆபரணம் வாங்குவீர்கள். செலவுக்கு ஏற்ற வருமானம் வரும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார்.முயற்சி எடுத்து நோக்கத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி**:பக்தி உணர்வு அதிகரிக்கும். போட்டிகளில் பங்கேற்பீர்கள். சிறு சிறு சந்தோஷங்கள் வரும். எதிர்பாராத பணவரவு உண்டு. திருமணம் கூடி வரும். தந்தை வழியில் ஆதரவு பெருகும்.

**துலாம்**: உங்களின் வாக்குவாதத்தால் வீண் பயம் ஏற்படும். முயற்சியைக் கைவிடாதீர்கள். குறையைத் திருத்திக் கொள்வீர்கள். சின்ன விஷயத்தையும் போராடி முடித்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்**:பணியிடத்திலும், வீட்டிலும் சிறு சலசலப்புகள் தோன்றி மறையும். பெரிய சிரமங்களில் இருந்து விடுபட்டு நிம்மதி காண்பீர்கள். புது முயற்சிகளைச் செயல்படுத்த தாமதிக்கலாம்.

**தனுசு**: பிறர் உங்கள் மேல் பழிபோடாதபடி கவனமாக இருங்கள். தடைகள் பற்றிக் கவலைப்படாமல் முன்னேறுவீர்கள். தன்னம்பிக்கை குறையாமல் கவனமாக இருங்கள்.

**மகரம்**: பற்றாக்குறை ஏற்பட்டாலும் கடன் வாங்க வேண்டாம். மனைவிக்குப் பல வகை முன்னேற்றங்கள் ஏற்படும். உற்றார் உறவினரை சந்திக்க வாய்ப்பு வந்து மகிழ்விக்கும்.

**கும்பம்**: மனம் திறந்து மன்னிப்புக் கேட்டு நட்பைப் புதுப்பிப்பீர்கள். வாழ்வை மேம்படுத்தும் ஐடியாக்கள் தோன்றும். கவலை தீரும். குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்பதை உணர்வீர்கள்.

**மீனம்**: உங்களின் உழைப்புக்கு தற்போது அதிகப் பலன் உண்டு. விலை உயர்ந்த பொருள்களை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். பிறரின் குற்றங்களை மன்னிப்பீர்கள்.

# நம் விடுதலையின் வாசல் கலையே!

சாம்.ரமேஸ்குமார்
மருதனார்மடம்

கலை இறைவனிடத்தில் இருந்து பிரசவிக்கப்படுகின்றது. இறைவனே கலையின் முழு வடிவம். அவன் படைத்த இந்தப் பிரபஞ்சமும் ஒரு கலைக்கூடம்தான். அதுவே கலைகளின் முதல் அத்தியாயத்தின் ஆரம்பமாகும்.

எல்லையற்ற பரப்பளவைக் கொண்ட கலையின் மையப் புள்ளியானது ஒவ்வொரு மனிதனிடத்திலும் இருக்கின்றது. அதனால் கலையை மேற்கொள்வதும் அதை ரசிப்பதும் ஒரு பரவச நிலையாகும். ஏனெனில் கலை இறைவனாகும். அவன் அனைத்து உள்ளங்களிலும் ஆன்மாவாக பரிணமித்துள்ளான்.

பிறப்பிலிருந்து இறப்புவரை அனைத்து மனிதர்களையும் கலை பின் தொடர்ந்து பயணிக்கின்றது. மனிதர்களின் உள்ளுணர்வுக்குள் இருந்து ஆரம்பித்து புறத்தே பல நிலைகளாக வடிவெடுத்து, தன்னைப் புதிய வார்ப்பாக்கிக் கொள்கின்றது.

ஒரு மனிதன், தன் அகவுணர்வுக்குள் குடி கொண்டிருக்கும் ஆன்மாவை அல்லது தன் சுயத்தை கலைகளின் ஊடாக உணர முற்படுவதே ஒரு சிறந்த கலையின் மாபெரும் வெற்றியாகும்.

நடராஜரின் நடனத்திலிருந்து மனித சமுதாயத்தின் சவ ஊர்வலத்தில் அடிக்கும் பறையாட்டம் வரை இக்கலைகள் இப்பிரபஞ்சம் முழுவதும் எங்கும் வியாபித்து நிற்கின்றன.

வேடனொருவனின் வலையில் அகப்பட்ட மான்போல, ஒரு மனிதனின் மனமானது, ஒரு சிறந்த கலையில் இயல்பாகவே அகப்பட்டுக் கொள்கின்றது. அதிலிருந்து அவன் மீள நினைத்தாலும் அது ஒருபோதும் இயலாத காரியமாகி விடுகின்றது.

எதிர்மறையான எண்ணங்கள் ஒரு மனிதனின் கலையார்வத்தால் மறைந்தே போகின்றது. இதனால் அவன் மனம் இறைவனை நோக்கி எந்தத் தடையும் இல்லாமல் குவிக்கப்பட்டு, அந்த மனிதன் தன் வாழ் நாளில் தர்மமெனும் கட்டுமரத்தில் பயணித்து புண்ணியமெனும் கரையை வெகு விரைவில் அடைகின்றான்.

கர்ம வினைகளைச் சுமந்து இந்த பிரபஞ்சத்தில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனையும், கலைகள், பிறப்பு இறப்பற்ற நிலைக்கு அழைத்துச் செல்லும் விடுதலையின் வாசலாகும்.

ஓர் இனத்தின் இருப்பையும். அதன் பாரம்பரியத்தையும் சுட்டி நிற்பது கலைகளின் சிறப்பம்சமாகும். கலையானது அழியத் தொடங்கும்போது அவ்வினத்தினுடைய இருப்பும் மறையத் தொடங்குகின்றது. அதனால் கலையை வளர்ப்பதும், பாதுகாப்பதும். ஓர் இனத்தினுடைய உரிமையாகும்.

பல மொழி, மதம் சார்ந்த இனங்களை எங்கும் பரந்து விரிந்த கலைகளால் மட்டும்தான் ஒரு புள்ளியில் இணைக்க முடியும். அதன் பயனாக பிரபஞ்சத்தின் ஒற்றுமையை எங்கும் விரிவாக்கம் செய்ய முடியும். இந்தச் செயலால் வன்முறையற்ற உலகையே நாம் எதிர்காலத்தில் தரிசிக்கலாம்.

அதனால்தான் தமிழர்களாகிய எம் முன்னோர்கள் சமய எழுச்சியின் ஊடாகவும். பக்தியின் ஊடாகவும் பாரம்பரிய கலைகளை பட்டி தொட்டியெங்கும் வளர்த்தெடுத்து, தமிழினத்தை ஒரு தனித்துவமான இனமாக எங்கும் மிளிரச் செய்தார்கள்.



## தவக்கால சிந்தனை

### கிறிஸ்தவர்களினது அடையாளம் யாது?

நாம் ஓர் இடத்தையடைய இடக்குறியீட்டை அடையாளமாகக் கேட்பதுண்டு. ஒருவரை இனங்கான ஆளடையாளங்களைக் கூறுவதுண்டு. இதுபோன்று அன்று இயேசுவை நம்பவும் புரிந்து கொள்ளவும் மக்கள் வெளி அடையாளங்களை எதிர்பார்த்தனர். கைதியாக நின்ற இயேசுவிடம் ஏரோது அரும் அடையாளங்களை எதிர்பார்த்தான்.

யூதர்களில் சிலர் இயேசு சிலுவையில் இருந்து இறங்கிவந்து இறைமகன் என்று அடையாளப்படுத்துவார் எனக் காத்திருந்தனர். ஆனால் சாவை வென்று உயிர்ப்பே தமது அடையாளமென இயேசு வெளிப்படுத்தினார்.

கிறிஸ்தவர்கள் என்று கூறும் நாம் எவ்வாறு எம்மையும் இயேசுவையும் அடையாளப்படுத்துகின்றோம்? மானிடர் வாழ்வு எப்பொழுது வலுவிழந்து துன்பத்தில் துவள்கின்றதோ, அப்போது வீறு கொண்டெழுந்து உதவிப் பாயும் உன்னத சக்தியாக நாம் எழுவதே இயேசுவின் அடையாளம்.

தீயவழிகளை விட்டு இரக்கச் செயல்களைத் தொடர்வதே கிறிஸ்தவத்தின் அடையாளம். மக்களைப் பிரித்து உரிமைகளை மறுத்து ஆட்சிசெய்யும் பாரபட்சத்துக்கு எதிராக ஒருங்கிணையும் போராட்டக் குரலே இயேசுவின் மனித விடுதலைக்கு அடையாளம்.

எமது வாழ்வே இயேசுவின் மீட்புக்கு அடையாளமாகட்டும். இந்தத் தவக்காலத்தில் தமது பாடுகள், போதனைகளின் அடையாளமாக எமது வாழ்வை அமைத்துக் கொள்வதையே இயேசு எதிர்பார்க்கின்றார். அதனைச் செயற்படுத்துவது எமது கடமையும் பொறுப்புமாகும்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை

# கோள் மண்டலம் சனியன்று திறப்பு

கொழுப்பு,பெப்.24

சுகாதார வழிமுறைகளுக்கு அமைய கோள் மண்டலம் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை திறக்கப்படும் என்று கோள் மண்டலத்தின் பணிப்பாளர் அருண பிரபா பெரேரா தெரிவித்தார். மண்டலத்தில் தினமும் இரண்டு காட்சிகளைக் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பார்வையிடும் திகதியை முன்னதாகவே பதிவு செய்து கொண்டு வருமாறு பார்வையாளர்களை அவர் கேட்டுள்ளார்.

0112586499 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொண்டு கோள் மண்டலத்தைப் பார்வையிடுவதற்கான முற்பதிவை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## 3 தீவுகள் விவகாரம்

# ஏல நடைமுறைகளை பின்பற்ற இலங்கைக்கு சீனா அழைப்பு

கொழும்பு,பெப்.24

**யாழ்ப்பாணம் தீபகற்பத்தில் அமைந்துள்ள மூன்று தீவுகளில் முன்னெடுக்கப்பட்டுள்ள மின் திட்டம் குறித்து சர்ச்சைகள் எழுந்ததையடுத்து, சர்வதேச ஏல நடைமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று சீனா இலங்கைக்கு அழைப்பு விடுத்துள்ளது.**

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் வடக்கில் பல்லாயிரக்கணக்கான "ஏழை மக்கள்" இந்த திட்டத்தின் மூலம் பயனடைவார்கள் என்று சீனாவில் சினோசோர்எடெக்வின் குழுமம் அறிவித்துள்ளது. சர்வதேச ஏல நடைமுறைகளுக்கு அமைவாக, ஆசிய அபிவிருத்தி வங்கியால் இந்தத் திட்டத்துக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

ஏல விதிமுறைகளின்படி, திட்டத்தின் கட்டுமானத்துக்கும், ஒப்படைப்புக்கும் மட்டுமே குழுமம் பொறுப்பாகும். அனைத்து செயற்பாடுகளும் இலங்கை மின்சார சபையின் முழுமையான கண்காணிப்பு மற்றும் நிர்வாகத்தின் கீழ் உள்ளன. இலங்கையின் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை மின்சார சபையின் தொடர்புடைய தேவைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதாகவும் குழுமம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த சர்வதேச ஏல நடைமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்றவும், ஒப்பந்தக்காரரின் நியாயமான உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கவும், அதன் சொந்த நம்பகத்தன்மை மற்றும் சர்வதேச நற்பெயரைப் பாதுகாக்கவும் இலங்கை அரசுக்கு, திட்டத்துக்குப் பொறுப்பான சீன குழுமம் அழைப்பு விடுத்துள்ளது, என்றுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாண தீபகற்பத்தில் அமைந்துள்ள நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் அனலைத்தீவில் சீனாவில் சினோசோர்எடெக்வின் கூட்டு முயற்சி எரிசக்தி திட்டத்துக்கு இலங்கை அமைச்சரவை அனுமதி வழங்கியது. எவ்வாறாயினும், இந்தத் திட்டம் குறித்து இந்தியா கவலை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ( -இ)



# முன்பள்ளி சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள்!

வவுனியா,பெப்.24

செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கந்தசாமி நகர், கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

"ரியா"பணப்பரிமாற்று நிறுவனத்தின் நிதி அனுசரணையில், செட்டிக்குளம் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் கார்த்திகாவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

ஆயிரம் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் செயற்றிட்டத்தின் கீழ், இந்தச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் செட்டிக்குளம் பிரதேச செயலக கணக்காளர், கிராம சேவையாளர், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-110)

## இராஜாங்க அமைச்சரை செருப்பால் தாக்கிய பெண்

கொழும்பு,பெப்.24

இராஜாங்க அமைச்சர் ஒருவரை, பெண் ஒருவர் செருப்பால் தாக்கியமையால் பரபரப்பு நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான செய்திகளை சமூக வலைத்தளங்களில் பலரும் பகிர்ந்து வருகின்றனர்.

ஜாஎல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதன் பின்னர் அந்தப் பெண்ணை நிகழ்வில் இருந்து வெளியேற்றுவதற்கு பாதுகாப்புப் பிரிவு நடவடிக்கை எடுத்தது என்று குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (க-இ)

# அனுமதியற்ற மாட்டிறைச் ; இருவருக்கு தலா 25,000 தண் ம்

## தவறின் சிறைத் தண்டனை

வலி.தென்மேற்கு, பெப்.24

சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியின்றி மாட்டிறைச்சியை ஏற்றிச்சென்ற முச்சக்கர வண்டிச் சாரதிக்கும், மாட்டிறைச்சி கடை உரிமையாளருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான், பணம் கட்டத் தவறின் இருவருக்கும் 5 மாதம் சிறைத் தண்டனையும் விதித்துள்ளார்.

யாழ்.குருநகரில் உள்ள மாட்டிறைச்சிக் கடைக்கு வழங்குவதற்காக 97 கிலோ கிராம் மாட்டிறைச்சியை முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்ற சாரதியும், மாட்டிறைச்சி கடை உரிமையாளரும் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த சுகாதாரப் பரிசோதகரிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

இறைச்சியைக் கைப்பற்றிய சுகாதாரப் பரிசோதகரால் முச்சக்கர வண்டிச் சாரதிக்கும் மாட்டிறைச்சி கடை உரிமையாளருக்கு திராக ஐந்து குற்றச்சாட்டு ள் சுமத்தப்பட்டு யாழ்.மேல் நீ ன்றத்தில் தாக்கல் செய்ய பட்ட வழக்கு உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து நீதிவான் இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தார். இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்ட நிலையில், தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் இருவருக்கும் 5 மாதம் சிறைத் தண்டனை வழங்குமாறும் உத்தரவிட்டார். ( -115)

## இடை நிறுத்திய வகுப்புகள் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.24

கொவிட் 19 தொற்றுக் காரணமாக தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் இடைநிறுத்தப்பட்டுள்ள வகுப்புக்கள் யாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப் படவுள்ளன.

மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பிற்பற்றி முகக்கவசம் அணிந்து வழமையான நேர ஒழுங்கில் வகுப்புகளுக்கு சமூகமளிக்குமாறு தகவல் தொழில் நுட்பப் பூங்கா நிறைவேற்று அதிகாரி அறிவித்துள்ளார். (ஐ)

# பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.24

ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத் தலைவர், செயலாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சிக் கருத்தரங்கு நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டுறவுச் சபையின் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.லோகசிவம்,உப தலைவர் என்.எஸ்.சத்தியதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இதில் "கூட்டுறவும் பொதுசனத் தொடர்பும்" என்ற பொருளில் மாவட்ட கூட்டுறவுச் சபையின் பதில் செயலாளர் த.ரமேஸ்குமார், மற்றும் "கிளைக்குழுக்களின் பொறுப்புக்களும் அவர்களின் கடமைகளும்" என்ற தலைப்பில் ஓய்வுநிலை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் வை. கைலநாதன் ஆகியோர் உரையாற்றினர். (ஐ-17)

## 14 பிக்குகள் தனிமைக்கு

கந்தானையில் உள்ள விகாரையில் பிக்கு ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அந்த விகாரையைச் சேர்ந்த 14 பிக்குமார் விகாரையி லேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை கந்தானை பிரதேசத்தில் 415 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (க-இ)

## சேவை நயப்பு நிக வு

தெல்லிப்பழை,பெப்.24

தெல்லிப்பழை ஆதார மருத் வமனையில் கடந்த 30 வருடங் ளுக்கும் மேலாகப் பணியாற்றி ப்வு பெற்ற தாதிய பரிபாலகர் சே ரா சேந்திரனுக்கான சேவை ப்பு விழா நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஆதார ம வமனை நோயாளர் நலன்புரி கத்தின் ஏற்பாட்டில் நாளைம ம் வெள்ளிக்கிழமை காலை 9 கு மருத்துவமனையின் புற் ாய் கேட்போர் கூடத்தில் இந்த ழ்வு நடைபெறவுள்ளது. (ஐ)

# நடப்பு ஆண்டிலும் பல்வேறு சமுர்த்தி உதவித் திட்டங்கள்

*மாவட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு*

**யாழ்ப்பாணம், பெப். 24**
**வறுமை ஒழிப்பை அடிப்படையாகக் கொண்டு இம்முறை பல்வேறு சமுர்த்தி உதவித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்று மாவட்டப் பணிப்பாளர் தி.விஸ்வரூபன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் வறுமை ஒழிப்புக்கென அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது பூரணத்துவமான வதிவிடம் சார் மனைப்பொருளாதாரத்துடன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுவூட்டல், சந்தை வலையமைப்பை பலப்படுத்துவதன் ஊடாக
தேசிய உற்பத்திகளை பிரபல்யப்படுத்துதல், தொழில் பயிற்சி மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தியின் ஊடாக வேலை வாய்ப்பின்மையைக் குறைத்தல், உற்பத்திக் கிராமங்களை உருவாக்குவதன் ஊடாக விசேட உற்பத்திகளை ஊக்குவித்தல், நச்சுப் பொருள்களற்ற உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்து உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், முறையற்ற கடன் வசதிகளை நாடிச் செல்வதனைக் குறைக்கச் செய்து, சலுகை ரீதியான வட்டி வீதங்களின் கீழ் கடன்களை வழங்குதல், அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
சுற்றாடல் நேயமுள்ள வாழ்க்கை முறைக்கு மக்களைப் பழக்கப்படுத்துதல் போன்ற நோக்கங்களை அடையும் முகமாக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சமுர்த்தி பெறும் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளவயதுப் பெண் தொழில் முயற்சியாளர்கள் 25ஆயிரம் பேரை இலக்காகக் கொண்டு வர்த்தக வலையமைப்பைப் பலப்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு பிரிவிலும் விற்பனை யகங்களை ஆரம்பித்தல்
இதனடிப்படையில் கிராம அலுவலர் பிரிவில் 2 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு மனையுடன் இணைந்ததாக வியாபார நிலையம் அமைத்து வழங்குதல் என்பவை இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே சமுர்த்தி காத்திருப்பு பட்டியல் மக்கள் மற்றும் பிற தகுதியானவர்கள் அடுத்த மாதத்தில் சமுர்த்தி மேம்பாட்டு அதிகாரிகள் மூலம் தங்கள் பிரதேச செயலாளர்களுக்கு விண்ணப்பித்து நன்மைகளைப் பெறலாம் -என்றார். (ப)

## ரஞ்சன் விவகாரத்தால் சபையில் அமளிதுமளி

கொழும்பு, பெப். 24
நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு கிடைக்கும்வரை ரஞ்சன் ராமநாயக்க நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரப்பட மாட்டார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்றத்துக்கு அழைத்து வருவது குறித்து சபாநர்யகர் ஒரு தெளிவான உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்ற கூட்டங்களில் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டும் என்றும் பிரதான எதிர்க்கட்சி சபையின் நேற்றைய அமர்வில் கோரிக்கை விடுத்தது.
இதற்குப் பதிலளித்த சபாநாயகர், ராமநாயக்க தொடர்பாக ஒரு தீர்மானம் வெளியிடப்பட்டிருப்பதால், இந்த விடயத்தில் மேலும் தீர்ப்பு வழங்க முடியாது என்றார். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலமுறை அழைப்பு விடுத்த போதிலும், சபாநாயகரும் பிரதி சபாநாயகரும் நேற்றைய அமர்வின் போது ராமநாயக்க தொடர்பான உத்தரவை பிறப்பிக்கவில்லை. இதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையின் முன்பாக வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சபையில் அமைதியின்மை நிலவியது.
(ஒ-இ)

## வலி.மேற்கு சபை அமர்வு நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம், பெப்.24
வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் நேற்று முன்தினம் 22ஆம் திகதி நடைபெறவிருந்த அமர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.
இது தொடர்பில் கருத்து தெரிவித்த சபை தவிசாளர் த.நடனேந்திரன், நேற்றுமுன்தினம் 22ஆம் திகதி நடைபெறவிருந்த அமர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது எனத் தெரிவித்தார். (ச-319)




## கோமரசங்குள பொதுப் பூங்கா பிரதேச சபையால் மறுசீரமைப்பு!

வவுனியா,பெப்.24
வவுனியா கோமரசங்குளம் பகுதியில் அமைந்துள்ள பூங்கா மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலை என்பவை பிரதேச சபையால் மறுசீரமைக்கப்படவுள்ளன. இதற்கென ஒரு மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையால் கோமரசங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பொதுப் பூங்கா நீண்ட காலமாக பயன்பாடற்ற நிலையில் காணப்படுகிறது. இதனால் பூங்காவிலுள்ள பெறுமதியான உபகரணங்களும் திருடர்களால் களவாடப்பட்டு வருகின்றன.
இந்நிலையில் குறித்த பூங்காவை சீரமைப்புச் செய்வதுடன் அதன் ஒரு பகுதியில் செயற்பட்டுவரும் ஆயுள்வேத வைத்தியசாலையையும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் குறித்த பகுதியில் துப்புரவுப் பணிகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டன.
இதில் பிரதேசசபை தவிசாளர் து.நடராயசிங்கம், செயலாளர் சுகந்தி கிசோர்,பிரதேச சபை உறுப்பினர்களான உத்தரியநாதன் மற்றும் சபை ஊழியர்கள் கலந்து கொண்டனர். (ச-110)

## பழமை வாய்ந்த மரம் தறிப்பு

சாவகச்சேரி, பெப். 24
சாவகச்சேரி மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக காணப்பட்ட மிகப்பெரிய வேம்பமரம் கடந்த சனிக்கிழமை தறித்து வீழ்த்தப்பட்டது.
பாடசாலையின் அதிபர், பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றின் அனுமதி பெறாமல் குறித்த மரத்தை தறித்து வீழ்த்திய தாகவும் நீண்டகாலமாக வீதியோரத்தில் பாத சாரிகளுக்கு நிழல் தந்த மரம் தறிக்கப்பட்டுள் ளது எனவும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பாக அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, வீதியோரத்தில் இந்தமரம் காணப்பட்டதால் கிளைகள் முறிந்து வீதியில் செல்வோருக்கும் வித்தியாலய கட்டடங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் அபாயம் காணப்பட்டது. மின்கம்பிகள் மரக் கொப்புக்கள் இடையே செல்வதால் அதனை அகற்றுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கோரப்பட்டதால் மரம் தறிக்கப்பட்டது. இது தொடர்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் போன்றவற்றுடன் கலந்துரையாடி அடுத்த நகர்வுக்குச் செல்லவுள்ளோம் எனத் தெரிவித்தார். (ய-9)

## இளைஞர் கழகங்களால் தலைமைத்துவப் பயிற்சி

சண்டிலிப்பாய், பெப்.24
சண்டிலிப்பாய் இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் உயரப்புலம் இளைஞர் கழகம் ஆகியவை இணைந்து நடத்திய தலைமைத்துவப் பயிற்சி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தப் பயிற்சிப் பட்டறையில் இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் மற்றும் இளைஞர் திறன் விருத்திப் பயிற்சிகள் என்பவை வழங்கப்பட்டன. பயிற்சியின் நிறை வில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் கிராம சேவையாளர், பிரதேச இளைஞர் சேவை அதிகாரி, இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சண்டிலிப்பாய் இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற-319).

## “தமிழில் கையெழுத்திடுவோம்” அங்குரார்ப்பண நிகழ்வு

உலக தாய்மொழி தினத்தன்று தமிழி அமைப்புக்கும், தமிழ் ஆர்வலர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொற்பதி அறிவாலயத்தில் நடைபெற்றது.
இந்த அமைப்புக்களுக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து தமிழின் இருப்பை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டுவரும் யாழ் மாநகர முதல்வர் தமிழி அமைப்பால் கௌரவிக்கப்பட்டார்.
அத்துடன் இந்நிகழ்வில் “தமிழில் கையெழுத்திடுவோம்” என்ற தமிழி அமைப்பின் செயற்றிட்டம் மனோன்மணி சண்முகதாஸ் என்பவரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.(ய-26,320, 20)



# தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் **Digital Printing Centre** ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை .

- **வரவேற்பாளர்**
  - பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
  - 21 தொடக்கம் 30 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்
  - **Ms Office & Computer Knowledge** தெரிந்திருத்தல்
  - தமிழ், ஆங்கிலம் உட்பட சிங்களம் ஓரளவு தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
- **Digital Printing Machine Operator**
  - ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
  - **Digital Printer Machine** இயக்கக் கூடியவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்
  - பயில விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்
- **Graphic Designer**
  - **Adobe Photoshop**
  - **Coral Draw**
  - **Adobe Illustrator**
  - **Adobe Dreamweaver**

  மேற்குறிப்பிட்ட துறையில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

  மேலதிக தகைமைகள்
  - **Adobe Flash**
  - **Adobe Premier**
  - **Autodesk 3D Max. Studio**
- **Marketing Field Staff**
  - ஆண்கள் விண்ணப்பிக்கலாம்
  - முன் அனுபவம் கருத்திற் கொள்ளப்படும்

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுய விபரக்கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து 28/02/2021 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

மின்னஞ்சல் முகவரி : **jobdocumentsbsa@yahoo.com**

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 07 . 1958 — மறைவு 23 . 02 . 2021

## சிவலை நாகேந்திரம் (நாகராசா)

கைதடி தெற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கு கைதடியை முன்னைய வசிப்பிடமாகவும், பிரான்ஸ் நாட்டை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சிவலை நாகேந்திரம் (நாகராசா) நேற்று (23.02.2021) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலை மற்றும் குஞ்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னாண்டி மற்றும் சோதி (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மருமகனும், சறோசாதேவியின் (பிரான்ஸ்) பாசமிகு கணவரும், கனோத் (லண்டன்), வினோத் (பிரான்ஸ்), ஜெனாத் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுசியா (லண்டன்), அருண்செயா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மணி, சின்னம்மா, கணேசன், பரமேஸ்வரி,இரத்தினம் (நவரத்தினம்), தவமணி, மல்லிகாதேவி, செல்வமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னவி (பொன்னு), காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், வேலுப்பிள்ளை, இராஜபூபதி மற்றும் தம்பிஜயா, தவமணி, திருச்செல்வநாதன், பஞ்சலிங்கம், ருவேந்திரன் (சுவிஸ்), ஜெயந்திரன் (சுவிஸ்), புலேந்திரன் (சுவிஸ்), நிர்மலாதேவி, இராசேந்திரன் (கொலன்ட்), தெய்வேந்திரன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்ரா (சுவிஸ்), சுஜாதா (சுவிஸ்), ஜெயவனி (சுவிஸ்), மகேந்திரன் (மகான்), வாகினி (கொலன்ட்), சுபா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.


# வீதியில் குப்பை கொட்டியவருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், பெப். 24

பிரதான வீதியில் குப்பை கொட்டிய குற்றத்துக்காக ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது.

யாழ் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி பீற்றர்போல் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது. (ம-319)

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் பாலசிங்கம்

(மாங்குளம் ஞானம் வர்த்தக நிலைய உரிமையாளர்)

யாழ். புங்குடுதீவு கிழக்கு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பாலசிங்கம் அவர்கள் 19-02-2021 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம், கனகம்மா தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா நல்லம்மா தம்பதியின் அன்பு மருமகனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கீதாதேவி(பிரித்தானியா), கோணேஸ்வரன்(கனடா), இந்திராதேவி(கனடா), மகேஸ்வரன்(கனடா), சதீஸ்வரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற திருஞானம், பத்மாசனிதேவி, பொன். சுந்தரலிங்கம், சரஸ்வதிதேவி, இளங்கோவன், பொன். சுபாஸ்சந்திரன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், திருமாறன், மீரா, கபிலன், தீபிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஜீவன், திவானா, ஆரூரன், சுமிதா, நராயன், ஆதனா, ஆதிரன், துருவன், தியா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், காலஞ்சென்ற குலசிங்கம், கனகரட்ணம், வர்ணமணி மற்றும் ராசேந்திரம், ரஞ்சனா, கோசலை, சந்திரா, சாரதா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பூபதி, யோகம்மா(செல்லம்), சீதேவிப்பிள்ளை(நாகேஸ்), சத்தியவதி, சீவரத்தினம், நேமிநாதன், கோவிந்தராசா, தேவராசா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2021) புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கீதா மாறன் - மகள் Mobile :+447474319895
கோணேஸ்வரன் - மகன் Mobile: +14163206827

தகவல் :
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## திரு.அம்பலவாணர் சிவசுப்பிரமணியம் (வீரன்)

யாழ்ப்பாணம், நல்லூரடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு சொர்ணவடலிப் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.அம்பலவாணர் சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (23.02.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் நாகரத்தினம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லத்துரை இராஜலட்சுமி தம்பதியரின் மருமகனும், நாகம்மா (லண்டன்), இராசரத்தினம், சீவரத்தினம் ஆகியோரின் சகோதரனும், யோகேஸ்வரி, லோகேஸ்வரன், சறோஜினிதேவி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், நந்தகுமார் (ரவி-ஜேர்மனி), கிருஷ்ணகுமார் (குமார்- ஹொலனட்), ரஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜெயமஞ்சுளா (மஞ்சு), துவாரகாதேவி (செல்வி), பிறேம்குமார் (பிறேம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்தியா, காவியா, வித்தியா, அஸ்வின் ஆகியோரின் விருப்பத்திற்குரிய பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2021) புதன்கிழமை பி.ப 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"நந்தவாசம்"
சொர்ணவடலி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
021 222 5198

தகவல்
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05.07.1940

மறைவு 25.01.2021

அமரர்

## தங்கம்மா ஆறுமுகம்


ஐயிரு திங்கள் கருவில் சுமந்த தாயின்
அந்தியேட்டிக் கிரியைகள் ஆற்றுகின்றோம்
கண்ணியமான வாழ்வு தந்த தாயே-
எமைவிட்டு
கடவுளின் அழைப்பில் சென்றாயோ?

உன் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கும்
**பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் - 11:25)

தோற்றம் 08 . 01 . 1959



மறைவு 13 . 02 . 2021

## ஞானசெல்வம் கிறிஸ்ரி பிறேமகுமார்

(Civil Engineer)

(Managing partner - Christy Construction, Levelling supervisor - China International Water and Electric Corporation Republic of Maldives, Site Agent - Walker Sons and Co.LTD, Implementing Agent - Department of Buildings; U.N.D.P Jaffna, Project Engineer - Habitat for Humanity; LEADS)

உசனை பிறப்பிடமாகவும் இல.78, குருசோ வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஞானசெல்வம் கிறிஸ்ரி பிறேமகுமார் அவர்கள் 13.02.2021 சனிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானசெல்வம், பூமலர் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரராஜசிங்கம், பத்மராணி ஆகியோரின் அன்பு மருமகனும், கிறிஸ்ரினா தர்ஷினியின் (Accountant - St.John's College, Jaffna) அன்புக் கணவரும், நோயல் நுக்ஷன் (London), ஜோயல் அனுக்ஷன் (HNB - Nelliady Branch) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டிம்பிள் திசாந்தி நுக்ஷன் (London), ஜொஆன் ஷாலினி அனுக்ஷன் (Interpreter-Danish Consulate) ஆகியோரின் அன்பு மாமனாரும், கெசியா மிஷேல் நுக்ஷன் அவர்களின் பாசமிகு பேரனும், பிறேமரஞ்சினி சோமநாதர், பிறேமகுமாரி புஷ்பராஜா (Retired Teacher) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயந்தன் பரராஜசிங்கம் (Canada), சுகந்தன் பரராஜசிங்கம் (Canada), துஷ்யந்தன் பரராஜசிங்கம், கிறிஸ்ரி பரராஜசிங்கம் (Proprietor - Para Lights) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் White House Parlour, இல.181, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் 25.02.2021 வியாழக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் நல்லடக்க வழிபாட்டின் பின்னர் அராலி அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் கல்லறைத்தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அருட்பணியாளர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
**077 844 7849**

# இறக்குமதி ஆலோசனை

இந்தியா, சீனா மற்றும் பிற நாடுகளிலிருந்து சகல வணிக, இயந்திர பொருட்களை சிறந்த மற்றும் நம்பிக்கை உள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து இறக்குமதி செய்ய 16 வருட அனுபவமிக்க ஆலோசகரை தொடர்பு கொள்க

**077 639 7976**

# தேவை

பலாலி, மயிலிட்டி, ஆவரங்கால் பகுதிகளில் அமைந்துள்ள கோவில்களில் சிவாகம முறைப்படி பூஜைகள் செய்வதற்கு குருக்கள் ஒருவர் ஆலயம் தேடுகின்றார்.

தொடர்புகளுக்கு:- **074 179 1300**

# தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல பலசரக்கு வாணிபத்துக்கு விற்பனை உதவியாளர் தேவை.

**077 116 5752**

# கேள்வி அறிவித்தல்

**விசுவமடுக்குளம்**

**பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் (வ-து)**

எமது சங்கத்திற்கான தேங்காய் எண்ணெய் ஆலை அமைப்பதற்கான கட்டிட வேலைகளுக்கு கேள்வி கோரல்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கோரப்படுகிறது. இது தொடர்பான விபரங்களை சங்க அலுவலக நேரத்தில் பெற்று பார்வையிடலாம்.

ஆர்வமுள்ள கேள்வி தாரர்கள் 24.02.2021ம் திகதியிலிருந்து 10.03.2021ம் திகதி வரை காலை பி.ப.15.00 மணிக்கு இடையில் எழுத்து மூலமான கோரிக்கையினையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/= ஐ செலுத்தியும் கேள்வி பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி கோரல்கள் 12.03.2021 காலை 10.30 மணிக்கு முன்னதாக தலைவர் விசுவமடுக்குளம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் 10ம் கட்டை விசுவமடு எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய விளக்க கூட்டம் 03.03.2021 காலை 10.30மணிக்கு விசுவமடுக்குளம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்க தலைமை அலுவலகத்தில் இடம் பெறும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் |
|---|---|---|---|
| VIS.PDCS/2021/01 | Existing vis PDCS building renovation / Construction of new drying platform (40′x30)′ | 2 மாதம் | C7 / C8 |

* கேள்வி பிணை வைப்பு தொகையானது தாங்கள் குறிப்பிடும் தொகையின் 1% ஐ 02.07.2021 வரையான காலப்பகுதிக்கு வங்கி பிணைப்பத்திரத்தை ஒப்படைக்க வேண்டும்.
* கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதி திகதியிலிருந்து 63 நாட்கள் (13.05.2021)வரை செல்லுபடியாகும்.
* கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியளவில் ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்வி சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

TP.NO – 0212061878

ந.ரவீந்திரராசா (தலைவர்)
விசுவமடுக்குளம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
விசுவமடு.

# அந்தியேட்டி நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 . 08 . 1939



மறைவு 27 . 01 . 2021

## அமரர் சின்னத்துரை துரைராஜா

(ஓய்வுநிலை அஞ்சல் அதிபர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 25.02.2021 வியாழக்கிழமை காலை 05.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் மறுநாள் 26.02.2021 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது நாவலடி ஊரிக்காடு இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும், கடந்த 27.01.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர் வளையங்கள் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செய்தவர்கள், தொலைபேசி, சமூக வலைத்தளங்களூடாக ஆறுதல் தெரிவித்தவர்கள், மற்றும் சகல வழிகளிலும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

நெற்கொழு வீதி, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.
076 369 8282 (உத்தராசா)
077 744 0166 (ஸ்ரீஸ்கந்தராஜா)

குடும்பத்தினர்.

# ஆணைக்குழுவின் பரிந்துரையை மதிக்க வேண்டும் இலங்கை!

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.24

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளின் வலியைப் போக்குவதற்கு பொறுப்புள்ள அரசாக நடக்க இலங்கை அரசு முயற்சிக்க வேண்டும். அவர்களின் காயங்களை ஆற்றுவதற்கு தனது சொந்த ஆணைக்குழுக்கள் முன்வைத்த பரிந்துரைகளை மதிக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றெப்லிஸ்ட் தெரிவித்துள்ளார்.

வடக்குக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள தூதுவர், காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்த சந்திப்புத் தொடர்பில் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'உங்கள் பிள்ளை அல்லது கணவன் காணாமல் போய்விட்டனர் என கற்பனை செய்து பாருங்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாத நிலைமையை யோசித்துப் பாருங்கள். இதுதான் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகளின் இதயத்தை நெருடும் நிலைமை. அவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்குரிய பதில்களை இலங்கை முழுவதும் தேடுகின்றார்கள்' என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-5)

# கோத்தா, மஹிந்தவுக்கு கொரோனாத் தடுப்பூசி

கொழும்பு, பெப்.24

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் கொரோனாத் தடுப்பூசி ஏற்றியுள்ளனர் என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (க-இ)


## பிறந்த நாள் வாழ்த்து



இன்றைய தினம் (24.02.2021)
80ஆவது அகவை நாள் காணும்

**டொக்டர்**
**சீனிவாசன் நவரட்ணம்**
**(வைத்திய நிபுணர்)**

அவர்கள் நீண்ட ஆயுளோடும்,
மன மகிழ்ச்சியோடும்,
நலமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
**விழிசிட்டி சனசமூக நிலையம்**

Best Wishes

## ஆச்சார்ய அபிஷேக அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வ மங்கலகரமான சார்வரி வருடம் மாசி மாதம் 13ஆம் நாள் (25.02.2021) வியாழக்கிழமை பூஷ நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய காலை 7.30 மணிமுதல் 9.00 மணிவரையிலான மீன லக்ன சுபமுகூர்த்த வேளையில்

கீரிமலை நகுலேஸ்வர ஆதினத்தை சேர்ந்த
**சிவஸ்ரீ தி. நடராஜக்குருக்களின் பரபௌத்திரனும்**
**சிவஸ்ரீ ந. இராமச்சந்திரக்குருக்களின் பௌத்திரனும்**
எமது புத்திரனுமாகிய

**பிரம்மஸ்ரீ பா.தரணிதரசர்மாவுக்கு**

**ஆனைவிழுந்தான் விக்ன விநாயகர் சந்நிதானத்தில்**
ஆச்சார்ய அபிஷேகம் நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்ட மித்ர குடும்ப சஹிதமாக வருகைதந்து ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

| வித்யா குரு: | தீஷா குரு: |
|---|---|
| "வேத சிவாகம ஞானபாஸ்கரன்" | "வேத சிவாகம வித்யா ஸாகரம்" |
| பிரம்மஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் | சிவஸ்ரீ வை.மு.பரம.சண்முகராஜா சிவாச்சாரியார் |

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

"ஸ்ரீநிகேதம்"
இளவாலை வடக்கு,
இளவாலை.
021 221 1902

சிவஸ்ரீ .ராம பாலசந்திரக்குருக்கள்
குடும்பத்தினர்.
(ஆதீன குரு - இளவாலை ஆனைவிழுந்தான்
விக்ன விநாயகர் ஆலயம்,
சித்தாமேழி ஞான வைரவர் ஆலயம்

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி- 45ரூபாய்
தொடர்புகளுக்கு:- 077 334 1281

## காணி தேவை

கல்வியங்காடு, ஈச்சமோட்டை, மணியந்தோட்டம், கொய்யாத்தோட்டம், கைதடிக்கும், சுண்டுக்குளிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் 2 - 3 பரப்பு காணி தேவை. விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:
**074 146 5721**

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் தனியார் சைவ உணவகம் மற்றும் உணவு உற்பத்தி நிறுவனத்திற்கு
- காசாளர்
- மனேஜர்
- உணவுபரிமாறுபவர்
- உணவு உற்பத்தியாளர்

உடன் தேவை.
ஆண், பெண் இருபாலாரும்.
தொடர்புகளுக்கு: 077 386 6250

## உடனடி வேலைவாய்ப்பு

1. தொழிற்சாலை பணியாளர்கள்
   ஆண்/பெண் வயது : 18-35
2. வெல்டிங் பணியாளர்கள்
   உதவியாளர்கள்
3. தச்சு தொழிலாளர்கள்
   உதவியாளர்கள்
4. அலுவலகப் பணியாளர்கள் (பெண்)

சம்பளம் ரூ. 13,500 - ரூ. 45,000
**நேர்முகத் தேர்வு**
**27.02.2021**
**காலை 8.30 - 1.00**
இடம் : பலாலி றோட்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
புன்னாலைக் கட்டுவன்
தொடர்பு:
**077 656 4873/021 224 0110**


## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு



### வழிபடுநர் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் -2021 ஒத்திவைத்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவையின் 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் ஏற்கனவே அறிவித்தபடி 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாதென்பதை வழிபடுநர் பேரவை உறுப்பினர்களுக்கு பணிவுடன் அறியத் தருகின்றேன்.

தற்போதைய கோவிட்-19 இன் தாக்கம் அதிகரித்து வரும் சூழ்நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்களுடனே பொதுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டுமென சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலைக் கருத்திற்கொண்டு 2021ம் ஆண்டிற்கான வழிபடுநர் பேரவை: - உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய வகையில் பிறிதொரு தினத்தில் பொதுக்கூட்டத்தினை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் அறிவித்தலை வழிபடுநர் பேரவை 2021ம் ஆண்டுக்கான உறுப்பினர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்வதுடன் மறு அறிவித்தல் போதிய கால அவகாசத்துடன் அறியத்தரப்படும்.

நன்றி
ந. மோகனரூபன்
செயலாளர்- அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்
நயினாதீவு.

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை
### பகிரங்க ஏல விற்பனை

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்கள் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. இப் பொருட்களை அலுவலக நேரங்களில் மட்டும் பார்வையிட முடியும்.

இடம் :- தலைமை அலுவலகம், வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)
காலம் :- 05.03.2021 (வெள்ளிக்கிழமை)
நேரம் :- காலை 10.30
குறிப்பு :- ஏலவிற்பனையில் பங்கு பற்றும் ஏலதாரர் மீளளிக்க கூடியதான பிணைப்பணம் ரூபா.1000.00 செலுத்தப்பட வேண்டும்.

**தவிசாளர்.**
**வலி.வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை**
24.02.2021


## நல்வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகட்டும்



இன்று (24.02.2021) புதன்கிழமை பீமரத சாந்திகாணும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய ஆதீன பரம்பரை மஹோற்சவ குருமணி, சாகித்ய சிரோன்மணி வடகோவை
**சிவஸ்ரீ மு.வை.பரமசாமிக்குருக்கள் முத்துக்குமார சாமிக்குருக்கள் ஸ்ரீமதி பர்வதவர்த்தினி தம்பதிகள்**
மேலும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ அம்பிகையைப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசிகூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.
சுப மஸ்து

வாழ்த்துக்கள்

**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி,**
**கிரியாகலாப முக்தாமணி,**
**சிவஸ்ரீ.ஜம்பு மஹேஸ்வரக்குருக்கள்**
**ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய**
**ஆதீன பரம்பரைக்குருமணி**
**நயினை - சுதுமலை**

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 06, ஐயர் வீதி, 12/2, 12/3என்னும் வரி மதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் சின்னத்தம்பி இராசரத்தினம் என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது.

மேற்குறித்த ஆதனங்களிற்கு விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட 11.12.1964ம் திகதிய பிரசித்த நொத்தாரிசு கிருஷ்ணபிள்ளை துரைசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட14740ம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் கந்தையா பூபாலசிங்கமும் பெண் இரத்தினம்மாவும் நிலப்பரப்பு 12 குளி 13ஐ பெற்றுள்ளார்கள்.

ஆதன இலக்கம் 12/2 ஐ உடைய 5பரப்பு ஆதனத்திற்கு விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை கோண்டாவில் கந்தையா பூபாலசிங்கமும் பெண் இரத்தினம்மாவும் பிரசித்த நொத்தாரிசு சின்னையா சிதம்பரநாதன் முகதாவில் 22.01.1972 ஆம் திகதியிடப்பட்ட 769ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிமூலம் பரமானந்தம் பெண் விமலேஸ்வரிக்கு சீதனமாக வழங்கியுள்ளார்கள்.

பின்னர் யாழ்ப்பாணம், கோண்டாவில் மேற்கு வயித்திலிங்கம் சின்னத்தம்பி பரமானந்தமும் பெண் விமலேஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு செல்வி ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் 14.01.2011 ஆம் திகதியிடப்பட்ட 5195ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் பூபாலசிங்கம் இராஜேந்திராவிற்கு நன்கொடை வழங்கியுள்ளார்கள்.

பின்னர் கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைச் சேர்ந்த பூபாலசிங்கம் இராசேந்திராவும் (தே.அ.அ.இல. 5332045381V) பெண் சண்முகேஸ்வரியும் (தே.அ.அ.இல. 577730806V) பிரசித்த நொத்தாரிசு அபர்ணா ஜனார்த்தன் முகதாவில் 15.01.2019 ஆம் திகதியிடப்பட்ட 898ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் 55/49,கஸ்தூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலசுந்தரக்குருக்கள் கணேஸ்வரனுக்கும் (தே.அ.அ.இல. 713022101V) பெண் அபர்ணாவுக்கும் (தே.அ.அ.இல. 777481584V) அறுதியாக விற்றுள்ளார்கள்.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று நுணாவில் இறை"கிழக்கில் வளவும் மறுபிரிவுகளும்" நிலப்பரப்பு 5 குளி 13. இது 2018.10.17ம் திகதி நிலஅளவையாளர் S.பாலேந்திரன் அவர்களின் 2018/966ம் இலக்கபடத்தில் துண்டுகள் 1,2 என காட்டப்பட்டதன் படி நிலப்பரப்பு 5 குளி 11.78. இதில் துண்டு 2 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு 5. இதற்கு மேற்படிபடத்தின்படி எல்லைகள்

கிழக்கு: ஒழுங்கையும் துண்டு 1 உம்

வடக்கு: பூபாலசிங்கம் இராஜேந்திரா பெண் சண்முகேஸ்வரியின ஆதனமும் துண்டு 1உம்

மேற்கு: ஒழுங்கை

தெற்கு: றோட்டு

இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

ஆதன இலக்கம் 12/3 ஐ உடைய 6 பரப்பு 16.91குளி ஆதனத்திற்கு விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை யாழ்ப்பாணம், கோண்டாவில் மேற்கு கந்தையா பூபாலசிங்கமும் பெண் இரத்தினம்மாவும் பிரசித்த நொத்தாரிசு கிருஷ்ணபிள்ளை துரைசிங்கம் முகதாவில் 23.01.1966 ஆம் திகதியிடப்பட்ட 15895ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிமூலம் இராசரத்தினத்துக்கும் பெண் மகேஸ்வரிக்கும் அறுதியாக விற்றுள்ளார்.

பின்னர் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்தசின்னத்தம்பி இராசரத்தினம் கைம்பெண் மகேஸ்வரியும் அவ்வூர் சின்னத்தம்பி இராசரத்தினம் மகள் தயாளினியும் பிரசித்த நொத்தாரிசு நிமலினிகதிரேசு முகதாவில் 27.05.1985 ஆம் திகதியிடப்பட்ட 806ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் சின்னத்தம்பி இராசரத்தினம் மகள் இராகினிக்கு நன்கொடை வழங்கியுள்ளார்கள்.

பின்னர் நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி தற்போதுNo. 236, Rue Marcadet, ESC-2, APP-23, Paris, 75018, Franceஐச் சேர்ந்த தம்பிராஜா தர்மபாலனும் பெண் ராகினியும் 08.09.2017ம் திகதியிட்டு பாரிஸ் பிரசித்த நொத்தாரிசு அன்னராணி மனுவேல்பிள்ளை அவர்களால் அத்தாட்சிப்படுத்திய அற்றோனித் தத்துவத்தின் பிரகாரம் நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி தற்போது 1036, பாலையூற்று, திருகோணமலையைச் சேர்ந்த செல்வரத்தினம் தயாளினி (தே.அ.அ இல. 647100252V) மூலம்பிரசித் நொத்தாரிசு வி.இளங்குமார் முகதாவில் 06.11.2017 ஆம் திகதியிடப்பட்ட 52ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் பூபாலசிங்கம் இராசேந்திராவிற்கும் பெண் சண்முகேஸ்வரிக்கும் அறுதியாக விற்றுள்ளார்கள்.

பின்னர், மேற்குறித்த உறுதிகள் பதியப்பட்ட காணிப் பதிவகத்தின் முழுமையான காணிப்பதிவேடு பழுதடைந்து விட்டதென்றும் இடையிலுள்ள உறுதிகள் தொடர்பற்றுக் காணப்படுகின்றது என்றும் கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைச் சேர்ந்த பூபாலசிங்கம் இராசேந்திராவும் பெண் சண்முகேஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு அபர்ணா ஜனார்த்தன் முகதாவில் 15.01.2019 ஆம் திகதியிடப்பட்ட 897ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பின்னர் கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைச் சேர்ந்த பூபாலசிங்கம் இராசேந்திராவும் (தே.அ.அ.இல. 5332045381V) பெண் சண்முகேஸ்வரியும் (தே.அ.அ.இல. 577730806V) பிரசித்தநொத்தாரிசுஅபர்ணா ஜனார்த்தன் முகதாவில் 15.01.2019 ஆம் திகதியிடப்பட்ட 898ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் 55/49,கஸ்தூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தபாலசுந்தரக்குருக்கள் கணேஸ்வரனுக்கும் (தே.அ.அ.இல. 713022101V) பெண் அபர்ணாவுக்கும் (தே.அ.அ.இல. 777481584V) அறுதியாக விற்றுள்ளார்கள்.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று நுணாவில் இறை"கிழக்கில் வளவும் மறுபிரிவுகளும்" நிலப்பரப்பு 12 குளி 13. இதில் வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு 7. இது 2017.23.10ம் திகதி நில அளவையாளர் S.பாலேந்திரன் அவர்களின் 1428ம் இலக்க படத்தில் துண்டு1 எனக் காட்டப்பட்டதன்படி நிலப்பரப்பு 6 குளி 16.91.இதற்கு மேற்படி படத்தின்படி எல்லைகள்

கிழக்கு: 12 அடிஅகலம் கொண்டஒழுங்கை

மேற்கு: கனகசபை விசுவலிங்கத்துக்குரிய ஆதனம்

வடக்கு: சுப்பிரமணியம் நாகமுத்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்

தெற்கு: பூபாலசிங்கம் இராசேந்திராவின்ஆதனம்

இவ்வெல்லைப்படி இதடங்கலும்

தற்போது பாலசுந்தரக்குருக்கள் கணேஸ்வரனும் பெண் அபர்ணாவும் இவ்வாதனத்தை தனதுபெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்
நகராட்சிமன்றம்
சாவகச்சேரி.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 25.01.2021 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் நடராஜா அருந்ததி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.02.2021) புதன்கிழமை 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

86, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

---

ஓம்விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



**திருமதி இராஜேஸ்வரி முத்துக்கிருஷ்ணன்**

பதுளையைப் பிறப்பிடமாகவும், கில்னர் லேன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.இராஜேஸ்வரி முத்துக்கிருஷ்ணன் அவர்கள் 23.02.2021 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை காமாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், முத்துக்கிருஷ்ணனின் அன்பு மனைவியும், சரண்யா, விசாகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌசிகனின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2021) புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் கில்னர் லேன் இல்லத்தில் நடைபெற்று, கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்


075 643 6737
076 916 9613

தகவல்:
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

பிறப்பு
21 . 07 . 1950



இறப்பு
23 . 02 . 2021

**காராளபிள்ளை பத்மநாதன்**

**(ஓய்வு பெற்ற மாநகர சபை ஊழியர்- Water Works Department)**

இல 02, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மொன்றியல் கனடாவில் வசித்தவரும், தற்பொழுது 49/5, யாழ் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய காராளபிள்ளை பத்மநாதன் (ஓய்வு பெற்ற மாநகர சபை ஊழியர்- Water Works Department) நேற்று (23.02.2021) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காராளபிள்ளை பொன்னம்மா தம்பதியரின் புதல்வனும், தேவராணியின் அன்புக் கணவரும், நிரஞ்ஜன், நிஷாந்தினி, ஜெயந்தினி (செல்வி), ஜெயசுதன், யாழினி ஆகியோரின் தந்தையும், சாமினா, கனகேந்திரன், வாகீசன், சர்மிளா, திருவரங்கன், ஆகியோரின் மாமாவும், கரிகாலன், அனபாயன், நிதிகாசன், யுவதிகா, கணாதீபன், சமிக்கா, விசாகன், பிரீத்திகா ஆகியோரின் பேரனும், இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, தனலட்சுமி, மஞ்சுளா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## வடக்கில்....

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 3 பேருக்கும், சாவகச்சேரி வைத்தியஅதிகாரி பிரிவில் ஒருவருக்கும், மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 24 பேருக்கும், மடு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாந்தை மேற்கில் இனங்காணப்பட்ட தொற்றாளர்கள் 6 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இரு குடும்பங்களைச் சேர்ந்த தொற்றாளர்கள் மன்னாரில் உள்ள ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடையவர்கள். இரு குடும்பங்கள் வலைப்பாடு பகுதியில் தொற்றுடன் இனங்காணப்பட்ட மீனவருடன் தொடர்புடையவர்கள்.

யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரம் பெற்றுள்ளது. சமூகத்தில் இருந்து பலர் இனங்காணப்பட்டுள்ள நிலையில், நேற்றுமுன்தினமும், நேற்றும் மருத்துவமனைகளில் இருந்தும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இனங்காணப்படும் தொற்றாளர்கள் பல இடங்களில் நடமாடியுள்ள நிலையில், கொரோனா வைரஸ் சமூகத் தொற்றாக மாறியிருக்கலாம் என்றும், எதிர்வரும் நாள்களில் புதிய கொரோனாக் கொத்தணிகள் உருவாகலாம் என்றும் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. (எ-26)

## சாவ. .....

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுகவீனம் காரணமாக இரு தினங்களுக்கு முன்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 73 வயதான இவர் சுவாச நோய் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சாதாரண விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த இவருக்கு, வழமையாக மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இவரது மகன் மன்னாரில் உள்ளார் அவர் அண்மைய நாள்களில் வீடு வந்து சென்றுள்ளார். இவருக்கு தடிமன் காய்ச்சல் காணப்பட்டதை அடுத்து மருத்துவனை விடுதியில் சேர்க்கப்பட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது. அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர் தங்கியிருந்த விடுதியில் பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் உட்பட விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்ற பலரின் விவரங்கள் ஆராயப்படுகின்றன என்று மருத்துவனைத் தகவல்கள் நேற்றிரவு தெரிவித்தன. இதே வேளை சாவகச்சேரி மருத்துவமனையில் பலர் தனிமைப்படுத்தப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-26)

## மாணவர்கள்....

ஒன்றில் கற்பிக்கும் இந்த ஆசிரியையின் வீட்டுக்கு திருகோணமலையில் இருந்து உறவினர்கள் வந்து தங்கியுள்ளனர். அவர்கள் திருகோணமலை திரும்பிய நிலையில், அவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதை யடுத்து ஆசிரியையின் குடும்ப உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அதில் ஆசிரியைக்குத் தொற்று உறுதியானது.

அதன்பின்னர் ஆசிரியையின் உறவினர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். இந்நிலையில், தும்பளைப் பகுதியில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஆசிரியையின் கணவர், மகள் உட்பட 12 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் மூவர் தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களாவர். இவர்கள் தரம் 9, 6 மற்றும் தரம் 2 இல் கற்பவர்கள் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். ஆசிரியையின் கணவர் பருத்தித்துறை மற்றும் அச்சுவேலி பகுதிகளில் நடந்த இரு மரண வீடுகளுக்கு சமயக்கிரியைகள் செய்யச் சென்றுள்ளார் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-26)

## யாழ்.....

டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நரம்பியல் நிபுணர் ஒருவருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதை யடுத்து அவருடன் தொடர்புகளைப் பேணிய மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் நோயாளிகள் ஆகியோரில் ஒரு பகுதியினருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவின் பொறுப்புத் தாதிய உத்தியோகத்தர், தாதிய உத்தியோகத்தர் மற்றும் நோயாளி ஒருவருக்கே தொற்று உறுதியாகியுள்ளது. தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோரை இனங்காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் பலருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள நிலையில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

## தேவாலய....

தொடர்புடைய ஒருவருக்கே தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பருத்தித்துறையில் உள்ள தேவாலயம் ஒன்றில் நடத்தப்பட்ட கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். அதையடுத்து, கூட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகள் நேற்றுக் கிடைத்த நிலையில், அவர்களில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளருடன் தொடர்புடையவர்களை இனங்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

## பிரபாகரனின்....

கிளிநொச்சி திருநகர் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

குடும்பப் பிரச்சினை காரணமாக விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த சந்தேகநபரின் கையடக்கத் தொலைபேசியை பொலிஸார் சோதனையிட்டனர். அந்தத் தொலைபேசியில் விடுதலைப்புலிகளின் தலைவர் உள்ளிட்டோரின் படங்கள் காணப்பட்டுள்ளன.

அதையடுத்துத் தடைசெய்யப்பட்ட அமைப்பின் புகைப்படங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

கைதான சந்தேகநபரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன் அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, வே.பிரபாகரனின் படத்தை வைத்து டிக்டொக் காணொலியில் ஒன்றை சமூகவலைத் தளத்தில் பதிவேற்றினார் என்ற குற்றச்சாட்டில் வத்தளையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 25 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த இந்த இளைஞர், தற்போது ஹற்றனில் வசிக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## சிவாஜிக்கு...

வண்டிமூலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்குத் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. (ம-20)

## சாவகச்சேரியில்....

கச்சேரி ஐயா கடையடியில் நேற்று நண்பகல் 1.40 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. நெல்லியடி விக்னேஸ்வரா வீதியைச் சேர்ந்த அன்ரனி சியான் (வயது20) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார். சாவகச்சேரியிலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற 'ஹைஏஸ்' வாகனமும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து நடந்துள்ளது.

இதில் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-26,159,9)

# ஐ.நா. எச்சரிக்கையை கவனத்தில் எடுப்போம்

## அரசு தெரிவிப்பு

கொழும்பு, பெப்.24

ஐ.எஸ். அமைப்பின் அடுத்த கட்ட வியூகம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பொதுச் செயலரால் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையும், ஆலோசனையும் கவனத்தில் கொள்ளப்படும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இணையவழி ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இலங்கை உட்பட சில ஆசிய நாடுகளில் ஐ.எஸ். அமைப்பின் செயற்பாடுகள் இடம்பெறக்கூடும் என ஐ.நா. பாதுகாப்பு சபையின் பொதுச்செயலாளரால் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே



அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

அவ்வப்போது இவ்வாறான தகவல்கள் கிடைக்கும். அவை தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உரிய வகையில் ஆராய்ந்து, கலந்துரையாடல்களை நடத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அந்தவகையில் தேவையான தகவல்கள் உரிய வகையில் வெளியிடப்படும். சில தகவல்களை பகிரங்கப்படுத்த முடியாது. எமக்கு வழங்கப்பட்டுள்ள அந்த ஆலோசனை மற்றும் தகவல்கள் தொடர்பில் கவனம் செலுத்தி, அதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்- என்றார். (எ-44)

# புலிகளை தோற்கடிக்க உதவியமைக்கு நன்றி

## இம்ரானிடம் தெரிவித்தார் மஹிந்த

கொழும்பு, பெப். 24

2009ஆம் ஆண்டு மே மாதத்தில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு பாகிஸ்தான் வழங்கிய ஆதரவுக்கும் உதவிக்கும் என்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம் இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு நேற்று இலங்கைக்கு வருகைதந்தார். இதையடுத்து நடைபெற்ற இருதரப்புக் கலந்துரையாடலிலேயே மஹிந்த இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை எப்போதும் பாகிஸ்தானை நெருங்கிய மற்றும் உண்மையான நண்பராகக் கருதுகிறது. எமது மக்களும் பாகிஸ்தானை மிகவும் மதிக்கின்றார்கள். பாகிஸ்தான், மிகவும் அத்தியவசியமான தருணத்தில் இலங்கைக்கு ஆதரவு நல்கிய நெருங்கிய நட்பு நாடாகும். நான் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் மிகவும் ஆபத்தான பயங்கரவாத அமைப்புடன் போராடுவதற்கு எமக்கு நேர்ந்தது. 2009 மே மாதம் அந்தப் பயங்கரவாத அமைப்பை முழுமையாக தோல்வியடையச் செய்வதற்கு பாகிஸ்தான் நல்கிய ஆதரவுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பயங்கரவாதம், மத அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் தொடர்ச்சியாக ஒன்றிணைந்து செயற்படுவோம்.

சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகம், ஆயுதக் கடத்தல் மற்றும் பிற சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க உரிய முகவர் நிறுவனங்கள் மூலம் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கு தற்போதைய பொறிமுறைகளுடன் முன்னோக்கிச் செல்வதற்கு எமது கலந்துரையாடல்களில் ஒப்புக்கொண்டுள்ளோம் - என்றார். (ம)

# சொந்தங்களை தேடியலைந்த 84 பேர் வடக்கு, கிழக்கில் சாவு!

வவுனியா, பெப்.24
வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்டுத்தர வலியுறுத்தி வீதிகளில் போராட்டம் நடத்துபவர்களில் இதுவரை 84 பேர், தங்கள் சொந்தங்களைக் காணாமலேயே உயிரிழந்துள்ளனர்.
வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை விடுவிக்க வலியுறுத்தியும், அவர்களை வெளிப்படுத்த வலியுறுத்தியும் கடந்த 4 ஆண்டுகளாகத் தொடர் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.
காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் சொந்தங்களைத் தேடி அலைபவர்கள் சொல்லொனாத் துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து வயோதிப ஓய்வு காலங்களில் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைகளிலும், ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் வாழ்கின்றனர்.
தங்கள் உறவுகளை இரவு, பகலாகத் தேடியலைந்த 84 பேர் நோய்களால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் இவ்வாறு 10 பேர் உயிரிழந்துள்ளனர்.
கடந்த இரு வாரங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். (ப-110)

## மாயமான மீனவரின் சடலம் கடலில் மீட்பு!

யாழ்ப்பாணம், பெப்.24
குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவு நோக்கிப் படகில் சென்றபோது இரு மீனவர்கள் காணாமல் போயிருந்தநிலையில், அவர்களில் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. நெடுந்தீவுக்கும், நயினாதீவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் அவரது சடலம் மீட்கப்பட்டது என்று நெடுந்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை குறிகாட்டுவானில் இருந்து பிற்பகல் 1.45 ம[illegible]க்கு நெடுந்தீவு நோக்கி நெடுந்தீ[illegible]வச் சேர்ந்த ஞானசிங்கம் றெ[illegible]பின்சன் (வயது43), மரியவேதந[illegible]யகம் நெயன் (வயது20) ஆகியோ[illegible] படகில் சென்றனர். கடலு[illegible] கொள்வனவு செய்யும் நிறுவன[illegible] ஒன்றில் அவர்கள் பணியாற்று[illegible]ர்கள். அவர்கள் நெடுந்தீ[illegible] சென்றடையவில்லை. அவர்க[illegible] படகு ஆள்களற்ற நிலையில் க[illegible]டுபிடிக்கப்பட்டது.
கட[illegible]த இரு நாள்களாக அவர்களை[illegible]த் தேடும் பணி நடைபெற்று வந்த நிலையில், நெடுந்தீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மரியவேதநாயகம் நெயன் என்பவரின் உடல் நேற்று மீட்கப்பட்டுள்ளது.
காணாமல் போயுள்ள மற்றையவரைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று நெடுந்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

# இந்தியா - இங்கிலாந்து பகலிரவு டெஸ்ட் இன்று

புதுடெல்லி, பெப். 24
இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் பகலிரவு ஆட்டமாக குஜராத்தில் உள்ள பட்டேல் அரங்கில் இன்று நண்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. முதலிரு ஆட்டங்களும் சென்னையில் நடைபெற்றன. முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணியும் இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணியும் வெற்றிபெற்று தொடர் 1:1 என்று சமநிலையில் உள்ளது. இந்த நிலையில் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.
பகலிரவு ஆட்டங்களைப் பொறுத்தவரையில் இந்திய அணி இதற்கு முன்னர் ஒரேயொரு ஆட்டத்தில்தான் விளையாடியுள்ளது. ஆனால் இங்கிலாந்து அணிக்கு அந்த அனுபவம் கூடுதலாக உள்ளது. எனினும் இந்திய அணிக்கு சொந்த மண் பலம் கைகொடுக்கும் என்பதால் இந்த ஆட்டத்தின் மீது பெரும் எதிர்பார்ப்பு உள்ளது.



இந்த ஆட்டம் நடைபெறவுள்ள குஜராத் பட்டேல் மைதானம்தான் உலகின் மிகப்பெரும் கிரிக்கெட் மைதானமாகும். இந்த ஆட்டத்தைக் காண்பதற்காக சுமார் 50 ஆயிரம் ரசிகர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிதாகக் கட்டப்பட்ட இந்த மைதானத்தில் இடம்பெறும் முதலாவது ஆட்டம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

**வான்கோழிகள் தேவை**
ஐந்து கிலோ நிறைக்கு மேற்பட்ட வான் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு:- 077 696 2585

**வேலையாட்கள் தேவை**
மேசன் கூலி
வேலையாட்கள் தேவை
076 660 1600

**விற்பனைக்கு**
சகலவிதமான Netbag
(உரைப்பை) களை கொழும்பு
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:- 077 248 7852

**வேலையாட்கள் தேவை**
கோண்டாவிலில் இயங்கும் அரிசி ஆலையொன்றிற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
தொடர்பு:- 077 957 4934

**அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை**
வாகன அனுமதிபத்திரம் (Light Vehicle) உள்ள மில் வேலையும் செய்ய கூடிய ஆட்கள் தேவை. மில் வேலை பழக விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
071 1176 896

# கடவுச்சீட்டை தொலைத்த அணித்தலைவர் சானக!

கொழும்பு, பெப். 24
இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ரி20 தொடர் இன்னும் சில நாள்களில் நடைபெறவுள்ள நிலையில், இலங்கை ரி20 அணித்தலைவர் சானகவின் கடவுச்சீட்டு தொலைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடர் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இதற்கான இறுதி ஆயத்தப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே அவரின் கடவுச்சீட்டு தொலைந்துள்ளமை தெரியவந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.
எனினும் சானகவுக்குப் புதிய கடவுச்சீட்டு வழங்கப்பட்டு அவரை மேற்கிந்தியத் தீவுகளுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம)





## தரங்க ஓய்வு!

கொழும்பு, பெப். 24
இலங்கை அணியின் முன்னாள் தலைவரான தரங்க சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.
சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில் இருந்து விடைபெறுவதற்கான நேரம் இது என்று நான் நம்புகின்றேன் என்று அவர் தன் ஓய்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். (ம)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
af பிரெஞ்சு மொழி
- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.